


கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கலாநிதி கார்த்திகேசு திருப்பதி



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நீள நினைதல் மலர்

29.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கலாநிதி கார்த்திகேசு திருப்பதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நீள நினைதல் மலர்

**29.06.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்டமுழுவதும் தருவோய் நீ"

வாழ்வதற்கு பல வழிகள் இருந்தும்
ஏனோ உமை காலன் பறித்துவிட்டான்
வழி தவறாமல் நேரிய வழியில்
தாங்களும் வாழ்ந்து எம்மையும் வழிநடத்தினீர்கள்
மாசற்ற அன்புடனும் சீரிய பண்புடனும்
வாழ்ந்து, உங்கள் புன்னகையில் எம்மைக்
கட்டி வைத்த எங்கள் உறவு நீங்கள்
உறவுகள் பல இங்கிருக்க ஏனோ
கண்ணீரில் கதறவிட்டு தவிக்க விட்டு
எங்கு சென்றீர்கள் எம் தெய்வமே....
அரனடி அடைந்த எமதன்புத் தெய்வத்தினை
இருகரம் கூப்பி அஞ்சலித்து அவர்தம்
திருப்பாதங்களுக்கு நீள நினைதல் மலரை
உமக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பாசமான,
உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"



உருவாய் மண்ணில் அருவாய் விண்ணில்
23.06.1958 16.05.2023

எம் அன்புத் தெய்வம்

அமரர்

# கலாநிதி கார்த்திகேசு திருப்பதி

## திதி நிர்ணய வெண்பா

நிலையது சோபகிருதெனும் ஆண்டினில்சேர் வைகாசித் திங்கள்
தலையொத்த அபரபக்க துவாதசி திதியதனில்-வேண்டிநின்றே
மலையொத்த மனதாளர் கலாநிதி திருப்பதி ஆசானே!
கட்டுப்பிலானை ஞான வைரவர்தாள் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர்என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## திருப்புகழ்

தனன தான தானான தனைதான தானான
தனைதான தானான – தனதான
அதல சேட னாராட அகிலமேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாததோள் வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள – விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உததி மீதி லேசாயு முலக மூடுசீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

## கந்தர் அனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒலியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## சண்டேஸ்வரர் துதி

மனாதிகளுக் கெட்டாத பரமானந்த வாழ்வினை
அங்கு ஓர் லிங்கம் மணலால் கூப்பித்
தனாதி தயந்தன் என்றும் தாபித்தான் பால்
தழைத்தவன் பாலாட்ட வந்து தடுக்கத்தாதை
எனாதவன் தன் இருபதமும் மழுவால் துண்டித்துத்
திகழ்ந்தவனைப் பராபரத்துள் இருத்தித் தானும்
பின்னாகி அருடைந்த விறற் சண்டேசன் தாள்
பிரசமலர் இறைத்திறைஞ்சிப் பரசுவாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை
அம்பிகைக்கு மங்களம்
ஆதி அம்மா கண்ணகைக்கும்
அனந்த கோடி மங்களம்

கோவையிலே கோயில் கொண்ட கண்ணகைக்கு மங்களம்
பாவையவள் பலானையைப் பதியாய்க் கொண்டாள் மங்களம்
பூவையவள் கூழாவிலே காட்சிதந்தாள் மங்களம்
நோவினோடு நோயும் நீக்கி வரமளிப்பாள் மங்களம்

கோவையன்று நாவினாலே நீதிகேட்ட கண்ணகை
பாவையவள் கரமிருக்கும் சிலம்புக்கும் மங்களம்
தேவியிடம் உருகிவரம் வேண்டுவோர்க்கும் மங்களம்
தேவையெல்லாம் பூர்த்தி செய்யும் பூரணிக்கும் மங்களம்.

## பட்டினத்தார் பாடல்

முடி சார்ந்த மன்னரும் மற்றமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந் துமண் ணாவதுங் கண்டு மிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரிலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையூரின் ஆகமக் கோயில்களின் மீது பாடப்பட்ட அருட்பாடல்கள்

## 01) கோவையூர் வெள்ளளெருவைப் பிள்ளையாரின் பேரில் பாடப்பட்ட திருப்பதிகம்

1. பாரில் புகழால் ஓங்கும் ஈழ நாட்டின் வடபாலாம்
ஏரால் திகழும் யாழாம் மண்ணில் கோப்பாய் பதிசேரும்
சீரார் நல்வெள் ளெருவைக் குறிச்சி மேவும் ஐங்கரனோ
தீரா வினைகள் அறுப்பார் நமக்கு அஞ்சா திருப்பீரே.

2. வேதம் ஓதிப் பூசை நிகழ்த்தும் பார்ப் பனரோடு
கீதம் பாடும் அடியார் சேரும் நல்வெள் ளெருவையதே
சீதக் குளத்தில் இலங்கும் கமல மலராம் அதுபோல
பாதம் அமைந்த வேழ முகத்தோன் அருள்செய் தலமாமே.

3. காலன் அவனை காலால் உதைத்து மார்க்கண் டேயனையே
ஞாலம் தனிலே காத்த சிவனின் மூத்த மகனாரோ
தாலம் வானில் ஓங்கி வளரும் வளம் சேர் கோவையிலே
சாலப் புகழ் சேர் நல்வெள்ளெருவை குறிச்சி மேவினரே.

4. யானை முகமும் பானை வயிறும் கொண்ட ஐங்கரனோ
மான்னேர் விழியார் சித்தி புத்தி என்னும் இருவர்க்கும்
தேனாய்த் திகழ்ந்த நாதா உனையே மனதில் நாள்தொறும்
ஊனை உருக்கி வழிபா டியற்ற கருணை புரிவாயே.

5. தந்தம் சேரும் ஆனை முகமும் ஐந்து கரங்களொடு
தொந்தி வயிறும் கொண்ட இறைவா நல்வெள்ளெருவைஅதை
சொந்தம் என்று எண்ணி உறைந்தாய் நாதா நாள்தொறும்
கந்தம் சேரும் மலர்கள் தூவி துதிப்போம் மனமார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கேடு செய்த கஜமுக அசுரன் சிரத்தை அறுத்தாயே
நாடும் அடியார் துயரம் தீர்த்து நல்வழி காட்டிடுவாய்
ஓடும் எலியை உன்வா கனமாய் தேர்ந்தே எடுத்தாயே
பாடும் அடியார் வாழ்வில் ஒளியைப் பெறவே அருள்வாயே.

7. குஞ்சரி வள்ளி வேலனைச் சேர வேழத்தின் உருவினிலே
கெஞ்சிடும் வகையில் பயத்தினை ஊட்டி தந்திரம் செய்தாயே
வஞ்சிய ரான வனிதையர் சித்தி புத்தி இருவரையும்
மஞ்சரி யான பூக்களை தூவி மகிழ்வுடன் நாம் துதிப்போம்.

8. பிரணவ ரூபன் எழுந்தருள் கின்ற நல்வெள் ளெருவையிலே
பெருமைகொள் புனித மகத்துவ ஆனித் திங்கள் சஷ்டிமுதல்
பூரணை வரைக்கும் உற்சவம் நிகழும் வேளையில் ராகமுடன்
ஆரணம் ஓதும் வேதிய ரோடு தொண்டர் களைப் பாரீர்.

9. தேனென இனிக்கும் மாங்கனிபெறவே பெற்றோரைவலம் செய்தாய்
மான்என நோக்கும் வலவாம் பிகையின் நாயகன் நீயல்லவா
கோன்என அரசன் முதலாய் அடிமைவரைக்கும் கருணை செய்து
கோன்எனத் திகழும் ஆண்டவன் நீயே அனுதினம்அருள்வாயே.

10. அங்குச மதனை ஆயுத மாக கரத்தினில் ஏந்தியவா
மங்கள வாழ்வை மனிதர்க்கு அருளச் சக்கரம் ஆடியவா
பொங்கிடும் அரவம் அணிந்தவன் புதல்வா அனுதினம் அருள்தரவே
தங்கத்தேர் இருக்கும் சீர்வெள் ளெருவை பதியினில் மேவினையே.

11. நல்வெள் ளெருவை பதியினில் மேவும் பிள்ளை யாரது பேரில்
சொல் எனும் உளியால் செதுக்கிய கவிதை ஆகிய சிற்பத்தை விரும்பி
கல்மனம் உருகும் வகையில் ஓதும் பக்தர்கள் மண்ணொடு விண்ணும்
செல்வர்க ளாக தேவர்கள் போற்ற வாளுவர் என்பது ஆணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02) கோவையூர் கண்ணகி அம்மன் பேரில் பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சி

### (எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. ஏழாம் கடலால் சூழ்ந்திடும் உலகின்
மாணிக்க துவீபம் எனுயொரு தீவாம்
ஈழத்தின் வடபால் இலங்கிடும் யாழாம்
மாவட்டம் சேரும் கோப்பாய்ப் பதியில்
கூழாவின் அடியில் காட்சியை அளித்து
கோயில் கொண்டாயே கண்ணகைத்தாயே
பாழாய்ப் பழவினை நீறாய்ப் போக
பரிவுடனே பள்ளி எழுந்தருளாயே.

2. கான் மயில் தோகையின் சாயலார் மாதர்
இன்னிசை பாடிட இளங்குயில் நாணும்
வான்தொடு கூழா மரத்தினை அடியார்
சுற்றியே வந்து கரங்களைக் கூப்பி
தேன் மலர் சொரிந்து தம்துயர் தீராய்
என்றே வேண்டி உன் அடி பணிவர்
ஊனுடல் உருகிட வணங்கிடுவோர்க்கு
அருள் செய்யவே பள்ளி எழுந்தருளாயே.

3. காவலன் பாண்டியன் விசாரணை யின்றி
தீர்ப்பினை வழங்கிய காரண மாக
கோவலன் கொலைக்களம் ஆயினன் அதனால்
கொழுநனைக் அகாலை செய்த கோவிடம் சென்று
பாவையே தாயே நீதியைக் கேட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியை அழித்திட நீ தீயைக் கேட்டாய்
கோவையில் கேடுகள் எதுவும் வராமல்
காத்திடவே பள்ளி எழுந்தருளாயே.

4. வணிகரின் குலத்தினில் உதித்த நல்லவனாம்
கோவலன் உன்னை மணந்து வாழ்க்கையிலே
கணிகையர் குலத்தவள் மாதவி நடனம்
ரசித்ததன் விளைவால் காதலால் இணைந்து
மணிகளும் பொன்னும் அவருக்குக் கொடுத்து
வறுமை நிலையினில் உன்னிடம் வரவே
பிணியுடைச் சிலம்பை தலைவனுக் களித்த
மாதரசி பள்ளி எழுந்தருளாயே.

5. கொள்ளையன் பொற்கொல்லன் சதிசெய்த தாலே
மங்கல வாழ்வெல்லாம் பறிபோக லாச்சே
எள்ளின் அளவுக்கும் இரக்கமும் இன்றி
கொலை செய்த பாண்டியன் அரண்மனை சென்று
கள்வனோ அல்லன் கணவன் என்றாயே
இத்தனை செய்தியும் ஓவியமாக
உள்வீதிச் சுவரினில் ஒளிரும் நற்தலத்தில்
கண்ணகியே பள்ளி எழுந்தருளாயே.

6. நாமகள் மாமியார் திருமகள் விரும்பி
ஆசன ாக அமரும்நல் மலராம்
தாமரை மலருறு தடாகமும் சூழ
இலங்கிடும் பலானையில் அமர்ந்திடும் தேவி
மாமரம் தேக்கொடு பனை பலாதெங்கு
ஓங்கியே வளர்ந்துநற் பயன்தரு பதியாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரச்சோலைகள் இலங்கும் பலானையில்
கண்ணகியே பள்ளி எழுந்தரு ளாயே.

7. தங்கமாம் வேதம்சொல் வேதியர் ஓர்பால்
மணிகளை அடித்தொலி கிளப்புவர் ஓர்பால்
பொங்கலும் குளிர்த்தியும் செய்பவர் ஓர்பால்
கூப்பிய கரமுறு அடியார் ஓர்பால்
மங்கள வாத்தியம் இசைப்பவர் ஓர்பால்
மகிழ்வுடன் திருமுறை ஓதுவர் ஓர்பால்
அங்கமும் நொந்திட உருள்பவர் ஓர்பால்
கோவையிலே பள்ளி எழுந்தரு ளாயே.

8. வான்நிலா ஒளிதிகர் சிலம்பினைக் கரத்தில்
ஏந்திய தாயே ஏந்துவோம் நாமே
தேன்மலர் சொரிந்திடும் சோலைகள் சூழ்ந்த
கோவையம் பதியினில் பலானைக் குறிஞ்சியில்
வான்வரை ஓங்கிய கூழா விருட்சத்தின்
ஆனிரை மேய்த்தவள் உந்தன் தலையில்
பேனினை எடுக்கையில் ஆயிரம் கண்ணொடு
தோன்றினையே பள்ளி எழுந்தரு ளாயே.

9. பங்குனித் திங்களில் பானைகள் அடுக்கி
பொங்கலும் நிகழும் ஆலயம் அதிலே
சிங்கத்தில் ஊர்ந்து அடியவர் படைக்கும்
அமுதினை அன்புடன் ஏற்பவள் நீயே
தங்கத்தின் நிகராய் அருளினைத் தருவாய்
தரணியில் கொடுமைகள் அனைத்தையும் ஒழித்து
மங்களம் பொங்கி மகிழ்வுடன் வாழ
மதிவதனீ பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கடவுளர் யாவரும் விண்ணுல கிருந்து
மண்ணுல கில்அவ தரித்தனர் ஆனால்
மடமகள் தேவி நீ மண்ணுலகிருந்து
விண்ணுக்குச் சென்ற கடவுளும் ஆனாய்
படைகளை உடைய பாண்டிய னோடு
நீதியை நிறுத்த வழக்கினை உரைத்தாய்
மடமைகள் யாவும் மண்ணிலே ஒழிக்க
மகிழ்வுடனே பள்ளி எழுந்தரு ளாயே.

11. கூந்தலை விரித்து நயனமும் சிவக்க
உடலினில் புழுதியும் படிந்திட நடந்து
சாந்தமும் இழந்து தனிச்சிலம் பொன்றைக்
கரத்தினில் ஏந்திய காட்சி கண்டோர்கள்
அஞ்சிடும் தோற்றத்தில் கற்பின் திறத்தால்
மதுரையை தீக்கிரை ஆக்கிய தாயே
குஞ்சரி மலர்நிகர் வதனத்தை உடைய
கண்ணகியே பள்ளி எழுந்தரு ளாயே.

12. விண்ணுறு தேவரும் தேன்மலர் சொரிய
துந்துபி வாத்தியம் நந்தியும் இசைக்க
கண்ணழ கரம்பையர் இன்னிசை பாடிட
மேனகை ஊர்வசி நர்த்தனம் ஆடிட
தண்ணளி குணமுறு தரணியோர் போற்றிட
மங்கள இசையினை கலைஞர்கள் வழங்கிட
தண்மதி நிலவென வதனமும் உடைய
கண்ணகியே பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03) வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமிபேரில் பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சி

### (எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. மாணிக்க துவீபமாம் ஈழத்தின் வடபால்
இலங்கிடும் யாழ்ப்பாண மாவட்ட மண்ணில்
வாணியின் அருள்சேர் கோவையம் பதியில்
கோயில் கொண்டாயே சித்திர வேலா
பாணிக் கிரகணத் தால்தெய்வ யானையைச்
சக்தியும் ஆக்கியே உலகத்தை இயக்கி
காணிக்கை யாயருள் வழங்கிடச் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

2. ஆதீனம் வழங்கிய சித்தாந்த பானு
பட்டமும் சூடிய ஆன்மக் கடலாய்
மேதினி போற்றிடும் சுப்பிர மணியக்
குருக்களினால் நன்கு பூசைகள் புரிந்த
மேதைகள் போற்றிடும் பெருமையும் உடைய
கோவையில் கோயில் கொண்டருளிய நாதா
மாதரதன் வள்ளியை மணந்தனை சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

3. மாங்கனி பெற்றிட மயில் மீது ஏறியே
உலகத்தை சுற்றிய கந்தனே பின்னர்
மாங்கனி அண்ணற்கு தந்தையுங் கொடுக்க
பழனியிலே நல்ல துறவியாய் அமர்ந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கினை இழைத்திட்ட அசுரரை அழித்து
தேவர்க்கு அருளினைப் புரிந்திட்ட தேவா
ஓங்கிடும் புகழுறு கோவையின் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தருளாயே.

4. புண்ணிய ஆகமம் உரைத்திடும் வேத
அந்தணர் மந்திர ஒலிகளும் ஒருபால்
பண்ணிசைப் பாடலும் பஜனையும் ஒருபால்
மங்கள இசையுடன் பூசைகள் ஒருபால்
கண்ணில்நீர் சிந்தியே ஆனந்தக் கூத்தினை
ஆடியும் பக்தர்கள் கூட்டமும் ஒருபால்
ஏண்ணிய வண்ணமே வாழ்விக்கும் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

5. தாரைக் குளத்தொடு நல்லநீர்க் கேணியும்
பரவைக்கடலோடு தரவையும் சேரும்
தேமலர் நறுமணச்சோலையும் மிளிர
நெல்லோடு வாழையும் தென்னையும் கமுகும்
பூமலர் மீதினில் வண்டுகள் மதுவுண்டு
பாடியே களித்திடும் கோவையாம் ஊரில்
பாமலர் பாடியே துதித்திட சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

6. மாயவன் மாலுக்கு மருகனாய் பொருளினை
அயனுக்கும் பிரணவப் பொருளினை உரைத்தாய்
தூயதாம் ஆறு கற்பொறி சிவனது
துதலினில் தோன்றிக் கயத்தினில் வீழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயதாம் பொறிகளோ குழந்தையாய் ஆகி
கார்த்திகைப் பெண்களின் கரத்தில் இணைந்தாய்
மாயையின் மக்களை அழித்திட்ட சித்திர
வேலவரே பள்ளி எழுந்தருளாயே.

7. நாவலின் கனியை ஔவைக்குக் கொடுத்து
பாடலைக் கனிவுடன் பாடிடச்
நாவலர் சபாபதி வாழ்ந்திட்ட புண்ணிய
பதியினில் பல்கலை கற்றுயர் பெரியார்
பாவலர் யாவரும் புகழுடன் வாழ்ந்த
அமரரும் போற்றிடும் அவனியின் ஊராம்
கோவையில் அமர்ந்த சற் குருவான் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

8. செந்தழல் மூட்டியே ஓமத்தீ வளர்த்து
ஆகுதி இறைவனுக் கன்புடன் அளித்து
செந்தண்மை பூண்டார் கிரியைகள் இயற்றி
அறமொடு சைவமும் தழைத்திடச் செய்யும்
அந்தணப் பெரியோர் வாழ்ந்திடும் ஊராம்
அவனியோர் போற்றும் கோப்பாய்ப் பதியில்
வந்தனைக் குரிய பெரும்புகழ் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தரு ளாயே.

9. கோவையின் கீழ்பால் இலங்குந்து வத்தைக்
குறிச்சியின் ஈச்ச மரத்தினில் வள்ளி
பாவையின் கணவன் வேலவன் காட்சி
கொடுத்தனன் கனவினில் அந்நாள் முதலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப் பிரதிஷ்டை செய்துமே பக்தியாய்
ஆடியவர் வலம் தந்து நாளும் வணங்கியே
நாவை அசைத்துப் பாடிட சித்திர
வேலவரே பள்ளி எழுந்தருளாயே.

10. வேரகம் பழமுதிர் சோலையும் திருப்பரங்
குன்றமும் ஆவினன் குடியும் அதனொடு
சீரலை வாயும் குன்றுதோ றாடல்
என்றிடும் ஆறுபடை வீட்டினில் அமர்ந்தாய்
சூரனை வதஞ்செய்த அருந்தமிழ் பாலா
சேவலின் கொடியை ஏந்திய வேலா
வீரனே முத்திப் பேரருள் சித்திர
வேலவரே பள்ளி எழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04) வடகோவையூர் கட்டுப்பலானையம்பதியின் ஞானவைரவர் ஆலயத்தின் பெயரில் பாடப்பட்ட திருப்பதிகம்

### (எழுசீர் விருத்தம்)

1. வரைகளும் நடுவண் இலங்குநன் னாடாம்
ஈழத்தின் சிரமென அமைந்த
திரைகடல் வளஞ்சேர் யாழ்குடா நாட்டின்
மத்தியில் ஓங்கிடும் கோப்பாய்
கரையறு புகழ்சேர் கருந்தன ஊரின்
உத்தர பாலினில் மேவும்
பிரையறு கட்டுப் பலானையாம் குறிச்சிப்
பதியினில் வைரவர் அமர்ந்தார்.

2. தரணியில் கோயில் என்னுமொரு நாமம்
கொண்டநற் தில்லையில் இருந்து
பரணியில் உதித்த வைரவப் பதியை
கோவையாம் ஊருக்கு கொணர்ந்து
நலமதாம் நாவல் விருட்சத்தின் நிழலில்
பண்டாரம் என்பவர் வைத்தார்
கரமதைக் கூப்பி அனுதினம் தொழவே
வைரவர் எங்களுக் கருள்வார்.

3. வாணியின் அருளால் வரம்உறு புலவர்
பாவலர் எனப் பெரும் அறிஞர்
நானிலம் போற்ற வாழ்ந்தநல் லூராம்
கோவையாம் எனுமொரு பதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனிலும் இனிய மொழிசொல்லும் மாதர்
பசனைப்பா ஓதிடும் தலமாம்
வான்தொடும் ஆலின் அடியினில் அமர்ந்த
வைரவர் அவரடி தொழுவோம்.

4. இருக்கெனும் வேதம் ஓதினர் பூசை
நடைபெறும் ஆகம விதிசேர்
பெருமை கொள் தலங்கள் பலபல விளங்கும்
கோவைநற் பதியினில் நடுவன்
செருக்குடன் ஐந்து சிரமுறு பிரமன்
தலைகளில் ஒன்றினைக் கிள்ளி
செருக்கினை அறுத்த செந்தொடை நாதன்
அமர்ந்தருள் புரிந்திடும் தலமே.

5. பண்டாரம் என்ற பெயரினைக் கொண்ட
அன்பர்தம் காணியை நீல
கண்டாராம் சிவனின் மூர்த்தம் வைரவர்க்கு
கோயிலை அமைத்திடக் கொடுத்தார்
தொண்டர்கள் போற்ற கோவையின் வடபால்
அமர்ந்திருந் தருள்பவர் அவர்க்கு
சுண்டலும் வடையும் அவலொடு சாதம்
சுக்கிர வாரத்தில் படைப்பார்.

6. ஆர்த்திடும் குயிலின் ஓசையும் ஒருபால்
மேவிடும் ஆல்மரத் தடியில்
மூர்த்தியும் தலமும் தீர்த்தமாம் மூன்றும்
சீருறப் பொருந்திய தலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்திட்ட சூலம் கர்ப்பக் கிருகத்தில்
கோலமாய் விளங்கிடம் பதியை
தோத்திரம் பாடித் துதித்திட அடியார்
துயரது பானுமுன் பனியாம்.

7. இற்றைக்கு நூற்றி ஐம்பது ஆண்டு
காலமாம் பழமை வாய்ந்த
கொற்றவர் வாழ்ந்து பெரும்புகழ் படைத்த
கோவைவாழ் மக்களும் செய்த
நற்றவப் பேறாய் வைரவர் கோயில்
தோன்றியது எனவே மொழிவர்
பற்றறநாமும் பழவினை போக
ஞானம்சேர் கடவுளைத் துதிப்போம்.

8. ஆதியில் அம்பல வாணரென் றுரைத்த
நாமமும் நாட் செல்ல மாறி
மேதினி போற்ற நாவலடி யென்று
உரைத்தனர் கோவிலின் அடியார்
சீதழ மான நாவலும் படவே
ஆல மரமது தோன்ற
கோதில்லா நாமம் ஆலடிஞான
வைரவர் எனவே நவின்றார்.

9. சோனழு என்னும் குறிச்சியில் வசித்த
அண்ணலாம் சின்னத்தம்பி
வானிகர்ச் செல்வம் ஆகிய குழந்தைப்
பேற்றினை அடையவே நேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்தோன்றும் மின்னல் நிகர்த்திட ஒளிசெய்
சூலத்தை பிரதிஷ்டை செய்ய
தேன்நிகர் மழலை சொல்லிடும் சேயர்
பாக்கிய மாகவே கிடைத்தார்.

10. சித்திரைப் பரணி நட்சத் திரத்தில்
அபிடேகம் மகேசுர பூசை
பக்தர்கள் செய்து பாடியே தொழுவார்
தைப்பொங்கல் திருவெம் பாவை
சித்திரை வருடப் பிறப்புச் கார்த்திகை
சத்தியைப் போற்றும் நவராத்திரியும்
பக்தியும் சேரும் நற்சிவ ராத்திரி
புனிதமாம் பூசைத் தினமே.

11. கோவையின் வடபால் கட்டுப் பலானை
குறிச்சியில் எழுந்தருள் கின்ற
பாவையர் சித்தி புத்தியின் நாதன்
வைரவக் கடவுளின் புகழை
நாவினால் உரைத்த பாவினை ஓதிப்
பரவுவார் தொல்வினை அகல
தேவர்வாழ் உலகில் நிரந்தர மான
பேரின்பப் பேற்றினைப் பெறுவார்.

- திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் யாவும் அமரர் கலாநிதி.கா.திருப்பதி அவர்களினால் தொகுக்கப்பட்டவையே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

## சம்மந்தர் தேவாரம்

### (இடர் தீர்த்த பதிகம்)

மறையுடையாய் தோளுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
என்றுன்னைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையாய் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 01

கனைத்தெழுந்த வெண்திரை சூழ்
கடலிடை நஞ்சுதன்னை
தினைத் தனையாம் மிடறில் வைத்த
திருந்திய தேவன் என்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல்
பேணி இராப்பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 02

நின்னடியே வழிபடுவான்
நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரை வெளவேல்
என்றடர் கூற்று தைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னடியே பரவி நாளும்
பூவோடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர் களையாய்
நெடுங்களம் மேயவனே. 03

மலைபுரிந்த மன்னவன் தன்
மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கை தங்கு
அவிர்சடை ஆரூரா
தலை புரிந்த பலி மகிழ்வாய்
தலைவா நின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 04

பாங்கி நல்லார் படிமம் செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கி
தாங்கி நில்லா அன்பினோடு
தலைவ! நின்தாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 05

விருத்தனாகிப் பாலனாகி
வேதம் ஓர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கை யாளைக்
கமழ்சடை மேற்கரந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருக்கனாய ஆதி தேவன்
அடியினையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 06

கூறுகொண்டாய் மூன்றும் ஒன்றாய்
கூட்டி ஓர் வெங்கணையால்
மாறு கொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்த மீதென்று
எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 07

குன்றின் உச்சி மேல் விளங்கும்
கொடி மதில்சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர் கோனை
அருவரைக் கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால்
ஏத்தி இராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 08

வேழ வெங்கொம்பொன் றொசித்த மாலும்
விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் தேட ஆங்கோர்
சோதியுள்ள ளாகி நின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேழல் வெண்கொம் பணிந்த பெம்மான்
கேடில்லாப் பொன்னடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 09

வெம்சொல் தம்சொல் ஆக்கி நின்ற
வேடமில்லாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியரும்
தத்துவ மொன்றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால்
தோத்திரம் நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே. 10

நீடவல்ல வார்சடையான்
மேய நெடுங் களத்தைச்
சேடர் வாழும் மாமறுகில்
சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை
ஞாசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார்
பாவம் பறையும்மே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பாடல்கள்

## பிள்ளையார் நாமாவளி

1. பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் எம்மைக் காக்கும் பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆனைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
(பிள்ளையார்)

அவல் கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் துங்குவார்
(பிள்ளையார்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் நேசமுள்ள பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

கலியுகத்தில் எம்மையே காக்க வேண்டி நேரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார்
(பிள்ளையார்)

பாடிப்புகழும் பக்தரின் பாவம் தீர்க்கும் பிள்ளையார்
கூடிப்பாடும் தொண்டரின் குறைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உன் கண் அசைவில் கலைதீரும் பிள்ளையாரப்பா
காரியங்கள் சித்தி செய்யும் பிள்ளையாரப்பா

உன் காலடியில் சரணடைந்தோம் பிள்ளையாரப்பா
வீடும் நாடும் சிறக்க வேண்டும் பிள்ளையாரப்பா

அரசமரம் கீழிருக்கும் பிள்ளையாரப்பா - இந்த
ஆண்டிக்கும் அரசனான தெய்வம் நீயப்பா

கொழுக்கட்டையும் சுண்டலும் பிள்ளையாரப்பா
உனக்கு இஸ்டம் போல படைத்திடுவேன் பிள்ளையாரப்பா

தாயும் தந்தையும் நீ எனக்கு பிள்ளையாரப்பா
நான் தவிப்பதிலே நியாயமில்லை பிள்ளையாரப்பா

மஞ்சளிலே பிடித்து வைத்தோம் பிள்ளையாரப்பா
எங்கள் மனம் குளிரப் பாடுகின்றோம் பிள்ளையாரப்பா

அறுகம் புல்லை சேர்த்து வைத்தோம் பிள்ளையாரப்பா
நீ அருகிருந்து காக்கவேணும் பிள்ளையாரப்பா

பிள்ளையாரப்பா வரம் தரும் பிள்ளையாரப்பா
பிள்ளை நானப்பா உனக்கொரு பிள்ளை நானப்பா

எங்கள் மனங்குளிரப் பாடுகின்றோம் பிள்ளையாரப்பா
உலகமெல்லாம் அடக்கியாளும் பிள்ளையாரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் நாமாவளி

1. அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத் தேனே அருள்விருந்தே
பொது நடத்தரசே புண்ணியனே புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
மலைதரு மகளே மடமானே மதி முகவமுதே இளங்குயிலே
நடன சபேசா சிதம்பர நாதா படன விவேகா பரம்பர தேவா
ஐயதிருச்சபை ஆடகமே ஆடுதல் ஆனந்த நாடகமே
உத்தர ஞான சிதம்பரமே சிவ சித்தியெல்லாம் தரும் அம்பலமே
அம்பலவா சிவ மாகாதேவா எங்களை ஆட்கொள்ள வாவாவா
சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ சாம்ப சிவா

2. ஓம்சிவாய ஓம்சிவாய ஓம்சிவாய ஓம்
நமசி வாய நமசி வாய வமசி வாய ஓம்
பஞ்சாட்சர மந்திரமே ஓம் சிவாய ஓம்
சொல்லச் சொல்ல இனிக்கும் நாமம் ஓம்சிவாய ஓம்

எங்கும் நிறைந்த பரமன் நாமம் ஓம் சிவாய ஓம்
அகிலம் போற்றும் பரம் பொருளாம் ஓம் சிவாய ஓம்
பக்திப் பெருக்கை ஊட்டும் நாமம் ஓம் சிவாய ஓம்
அருளை நல்கி நன்மை பயக்கும் ஓம் சிவாய ஓம்

வல்வினைகள் போக்கும் நாமம் ஓம் சிவாய ஓம்
கஷ்டம் துன்பம் நீக்கும் நாமம் ஓம் சிவாய ஓம்
பாடப் பாட உள்ளம் குளிரும் ஓம் சிவாய ஓம்
என்றும் இன்பம் நல்கும் நாமம் ஓம் சிவாய ஓம்

தர்மம் அதை ஓங்கச் செய்யும் ஓம் சிவாய ஓம்
அதர்மம் முற்றாய் அளிக்கும் நாமம் ஓம் சிவாய ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துக் குகந்த நாமம் ஓம் சிவாய ஓம்
நற்துணையாய் நிற்கும் நாமம் ஓம் சிவாய ஓம் - என்றும்
நற்துணையாய் நிற்கும் நாமம் ஓம் சிவாய ஓம்.

## அம்மன் நாமாவளி

1. ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் (ஓம் சக்தி ஓம்)

ஆதிமறை ஆகமப் பட்டுடுத்து
ஐம் பூதச் செஞ்சோதி குடைபிடித்து
நாத கலா விந்து வளர் சடைமுடித்து
ஞானசிவ சுந்தரியே வந்தருள்வாய்
(ஓம் சக்தி ஓம்)

வெண்கமலம் செங்கமலம் சிங்கமேறி
வீணை மலர் வாள் குலிசவேலும் தாங்கி
பண்கமழும் கிண்கிணியின் பதமசைத்து
பாண்டுரங்கன் சோதரியே வந்தருள்வாய்
(ஓம் சக்தி ஓம்)

சிங்காரப் பல்லழகு சிரிப்புடனே
செம்மேனி வீபூதித் தரிப்புடனே
சங்கீத அட்சரத்து நடையுடனே
சல்லாபப் பைங்கிளியே வந்தருள்வாய்
(ஓம் சக்தி ஓம்)

பார்க்குமிடம் எங்குமுனதுருவம்மா
பக்திகொண்டு பார்ப்பவர்க்குத் தெரியுமம்மா
கூர்த்த சிவ ஞானமுத்தைத் தாருமம்மா
கொண்ட துயர் பந்தவினை தீருமம்மா (ஓம் சக்தி ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றதுணை இங்கொருவர் இல்லையம்மா
ஓங்கார நடமிடும் தில்லையம்மா
பெற்றவளே நானுனது பிள்ளையம்மா
பேசிகரு செம்பொன் புகழ் வெள்ளையம்மா (ஓம் சக்தி ஓம்)

2. அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெமைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய். (அம்மா அம்மா)

நின்றால் நடந்தால் உன்நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா. (அம்மா அம்மா)

## கண்ணகை அம்மன் துதி

3. மீனாட்சி சுந்தரம் விசாலாட்சி சுந்தரம்
காமாட்சி சுந்தரம் கதம்பவன சுந்தரம்
அட்டியிலே சுந்தரம் அபிடேக சுந்தரம்
கற்பூர சுந்தரம் கடம்பவன சுந்தரம்
பக்தியிலே சுந்தரம் பரவச சுந்தரம்
சித்தியிலே சுந்தரம் சிவகாம சுந்தரம்
ஆலாட்ச வாச சம்பு மீனாட்சி சோமசுந்தரம்
தில்லையில் ஆடிய சுந்தரமே - உன்
திருநடனம் அருள் சுந்தரமே.
சிவகாமி பாகா சுந்தரமே - உன்
திருநடனம் அருள் சுந்தரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை வளர் நகர் மீனாட்சி
வந்தெமக்கருள்வாய் விசாலாட்சி
கோவை வளர் நகர் கண்ணகையே
கோல தரிசனம் தந்தருள்வாய்.

## கண்ணன் பாடல்

1. உன்னடியில் அன்பு வைத்தோம் கண்ணபரமாத்மா
உலகெல்லாம் நீ எனக்கு கண்ண பரமாத்மா
வண்ணமலர் சோலையிலே கண்ண பரமாத்மா
வசந்த மணம் பரப்புகின்றாய் கண்ண பரமாத்மா (உன்னடியில்..)

பொன்பரவும் அருணனிலே கண்ண பரமாத்மா
புன்னகைசெய் அருளளகா கண்ண பரமாத்மா
மின்னொளிரும் மேகத்திலே கண்ண பரமாத்மா
மின்னுவதுன் வண்ணமடா கண்ண பரமாத்மா (உன்னடியில்..)

வஞ்சனை செய்பூதகியே கண்ண பரமாத்மா
வட்டமுலை உண்டு கொன்றாய் கண்ண பரமாத்மா
பிஞ்சிளம்சேர் தளிரடியாய் கண்ண பரமாத்மா
மேயச் சகடை உடைத்தவனே கண்ண பரமாத்மா
(உன்னடியில்..)

கன்ரரக்கன் உடலை வீசி கண்ண பரமாத்மா
கலகல என கனி உதித்தாய் கண்ண பரமாத்மா
ஆயர்களின் கோகுலத்தில் கண்ண பரமாத்மா
கடும் புயலை தடுத்து நின்றாய் கண்ண பரமாத்மா
(உன்னடியில்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சரவு மேலிருந்தே கண்ண பரமாத்மா
நர்த்தனம் செய் அர்த்தமென்ன கண்ண பரமாத்மா
அச்சமில்லை அச்சமில்லை கண்ண பரமாத்மா
உம்அருள் எம்மை காக்கும் ஐயா கண்ண பரமாத்மா
(உன்னடியில்..)

காற்றினிலும் பூங்குழலே கண்ண பரமாத்மா
காதில் வந்து கொஞ்சுதப்பா கண்ண பரமாத்மா
ஆற்றினிலும் வேதஒளி கண்ண பரமாத்மா
ஆத்மசுகம் பேசுதப்பா கண்ண பரமாத்மா
(உன்னடியில்..)

ஆலியிலே கலந்து விட்டாய் கண்ண பரமாத்மா
அறிவினுக்கு அறிவானாய் கண்ண பரமாத்மா
நாவினாலே சொல்ல சொல்ல கண்ண பரமாத்மா
நல்லமுதம் போல் இனிப்பாய் கண்ண பரமாத்மா
(உன்னடியில்..)

2. கண்ணன் வந்தான் இங்கே கண்ணன் வந்தான்
எழை கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
தேடி நின்ற கண்களிலே கண்ணன் வந்தான்
தீபம் ஒன்று கையில் ஏந்திக் கண்ணன் வந்தான்
கேட்டவர்க்கு கேட்டபடி கண்ணன் வந்தான்
கேள்வியிலே பதிலாகக் கண்ணன் வந்தான்
தர்மம் என்னும் தேரில் ஏறிக் கண்ணன் வந்தான்
தாளாத துயர் தீர்க்கக் கண்ணன் வந்தான் (கண்ணன்…)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடவர்களை நடக்க வைக்கும் பிருந்தாவனம்
மூடர்களை அறிய வைக்கும் பிருந்தாவனம்
திருடர்களைப் பார்க்க வைக்கும் பிருந்தாவனம்
ஊமைகளைப் பேச வைக்கும் பிருந்தாவனம்
அடையாத கதவிருக்கும் சந்நிதானம்
அஞ்சாத சொல்லிருக்கும் சந்நிதானம்
சந்நிதானம் சந்நிதானம் சந்நிதானம் (கண்ணன்...)

கருணை என்னும் கண்திறந்து பார்க்க வேண்டும்
காவல் என்னும் கைநீட்டிக் காக்க வேண்டும்
கனிமழலை குரல்கொடுத்துப் பாடவேண்டும்
கருணையுள்ள தாயுமதைக் கேட்க வேண்டும்
கவலைகளை உன்னிடத்தில் தந்தேன் கண்ணா
கருணையே அருள் செய்ய வருவாய் கண்ணா
(கண்ணன்...)

## முருக நாமாவளி

1. முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித்தருள்வாய்
முடியா மறையின் முடிவே அசுரர்
முடிவே கருதும் கதிர்வேலவனே! (முருகா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதிப்பொருளே வருக!
துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்

(முருகா)

அமரா பதிவாழ் வுறவே
அருள்வாய் சரணம் சரணம்
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் கூர் வேலவனே சரணம்

(முருகா)

அறிவாகிய கோயிலிலே
அருளாகியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ்வுறவே புவிமீ தருள்வாய் (முருகா)

குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
ஸமரா திபனே! சரணம் சரணம் (முருகா)

2. சற்குருவாய் வருவாயே சித்திரவேலா
சஞ்சலங்கள் தீர்க்கும் எங்கள் சித்திரவேலா
சரவணபவ சண்முகமே சித்திரவேலா
சந்தேகம் தீரும் உன்னை சரணடைந்தாலே

சற்குருவாய் வருவாயே சித்திரவேலா
சஞ்சலங்கள் தீர்க்கும் எங்கள் சித்திரவேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவைநகர் பதிதனிலே சித்திரவேலா
தொண்டர் குறை தீர்த்தருள்வாய் சித்திரவேலா
கண்டம்பல கடந்தாலும் சித்திரவேலா
என்றும் எங்கள் நினைவில் நிற்பாய் சித்திரவேலா

சற்குருவாய் வருவாயே சித்திரவேலா
சஞ்சலங்கள் தீர்க்கும் எங்கள் சித்திரவேலா

உள்ளமதனில் குடியிருக்கும் சித்திரவேலா
உணர்வாகி உருவானாய் சித்திரவேலா
அனல் வடிவாய் வந்தவனே சித்திரவேலா
அருட்குருவே அனைத்தும் நீயே சித்திரவேலா

சற்குருவாய் வருவாயே சித்திரவேலா
சஞ்சலங்கள் தீர்க்கும் எங்கள் சித்திரவேலா
சரவணபவ சண்முகமே சித்திரவேலா
சந்தேகம் தீரும் உன்னை சரணடைந்தாலே

## வைரவர் நாமாவளி

1. ஞான வைரவர் நமோ நமோ
நம்பினோம் உமை நமோ நமோ
சூலாயுதனே நமோ நமோ
சுந்தரப் பொருளே நமோ நமோ
சோதி சொரூபா நமோ நமோ
சுடர் விடு பொருளே நமோ நமோ
பாலயமாம் சிவ வடுகேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலயமாம் குக வடுகேசம்
பாலயமாம் சிவ சேத்திர பாலயம்
பாலயமாம் குக சேத்திர பாலயம்
மார்த்தாண்ட பைரவ மல்லாரே
மாமப சங்கர திரிபுராரே
கபால மால அலங்கார
கால பைரவ மாம்பாகி
வைரவ சுவாமி அடியோம் வல்வினை
வல்விரைந்தோடவே அருள்வாய் அருள்வாய்
அருள்வாய் அருள்வாய் அருள்வாய் அருள்வாய்
பரமானந்தம் தந்தள்வாய்
பரசிவ நிந்தை செய்பிரம்மாவையும்
தலை பாரம் அறுப்பவரே
பக்தர்களுக்குயர் சித்தியளித்தருள்
பண்பொடு செய்பவரே
செந்தொடையுடையீர் முறுவல் படையீர்
செய்திகள் சூலம் கையில் கொண்டு

(வைரவ சுவாமி)

2. ஆதி மூலப் பெருமானே ஞானவயிரவா – எங்கள்
ஆதிசிவன் பாலகனே ஞானவயிரவா
திரிசூல நாதனே மைந்தனே நீ ஞானவயிரவா
ஞானத்தால் வல்லவனே ஞானவயிரவா – என்றும்
ஞானஜோதி ஆனவனே ஞானவயிரவா (ஆதி மூல)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் பிடித்தவனே ஞானவயிரவா – எங்கள்
சுந்தரரே வாவேனய்யா ஞானவயிரவா
திரிசூலம் கொண்ட ஐயா ஞானவயிரவா
முறமையுள்ள தெய்வம் அப்பா ஞானவயிரவா
நீயில்லாத கோவில் இல்லை ஞானவயிரவா – எங்கள்
நிலைகொண்ட தெய்வம் அப்பா ஞானவயிரவா (ஆதி மூல)

கல்லுவைத்த கோவிலெல்லாம் ஞானவயிரவா – நீயும்
காவலாய் நின்றிடுவாய் ஞானவயிரவா
கருநாயின் மீதிலேறி ஞானவயிரவா – நீயும்
காட்சி தனைக் காட்டேனையா ஞானவயிரவா
பூசை நடக்கு தப்பா ஞானவயிரவா - இந்த
புதுமையுள்ள ஆலயத்தில் ஞானவயிரவா (ஆதி மூல)

தீபம் எரியுதப்பா ஞானவயிரவா - இந்த
திருக்கோவில் வாசலிலே ஞானவயிரவா
வடைமாலை சாத்தியெல்லோ ஞானவயிரவா – எங்கள்
வரம் கேட்டுப் பூசை செய்தோம் ஞானவயிரவா
சரணம் சரணம் ஐயா ஞானவயிரவா – உந்தன்
பாதமலர் சரணம் அப்பா ஞானவயிரவா (ஆதி மூல)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

ஐயன் ஐயன் ஐயன் ஐயன் வைரவர்க்கு மங்களம்
ஆலடியில் வீற்றிருக்கும் வைரவர்க்கு மங்களம்
பரமனது வம்சத்திலே வந்துதித்தான் மங்களம்
பிரமனது தலைநறுக்கி செருக்கறுத்தார் மங்களம்
தரணி போற்றும் சிதம்பரத்து அம்பலவான வைரவர்
பரணி சேரும் சித்திரையில் வந்துதித்தார் மங்களம்
மரமதுவாம் நாவலிலே காட்சி தந்தார் மங்களம்
வரமளிக்கக் கோவை வந்த வைரவர்க்கு மங்களம்

## தேவாரம்

### (வைரவ சுவாமி)

ஏன்ற அந்தணன் தலையினை யறுத்து
    நிறைந்த மாலுதரத்தினை ஏற்று
தோன்று தோள் மிசைக் களே பரந்தன்னை
    சுமந்த மாவிரதத்தவன் காலன்
சான்று காட்டுதற்கு அரியவன் எளியவன்
    தன்னைத் தன்னிலா மனத்தார்க்கு
மான்று சென்றணையாதவன் தன்னை
    வலிவலந்தனில் வந்து கண்டுகொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம் (பொது)

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்கழலுருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

## நாராயணன் துதி

வாடினன் வாடி வருந்தினன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையிற் பிறந்து
கூடினன் கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளாய்
உணர்வென்னும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாட்கலி கன்றி
செஞ்சொல்லால் எடுத்த தெய்வ நன்மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயர்இலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு
நாராயணா எனும் நாமம்.

## திருத்தொண்டத் தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலக்கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையான் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவல் நின்றவூர் பூசல்
வரிவளையான் மாணிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணனார்க் கடியேன்
திருநீலக் கண்டத்துப் பாணனர்க் கடியேன்
அன்னவனாம் அரனடியை அடைந்திட்ட சடையன்
இசையானி காதலன் திருநாவ லூர்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைக்கேட் டுவப்பாம்
ஆரூரில் அம்மானுக் கன்பாரா மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

தொல்லை யிரும்பிறிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க 01

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க 02

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான் 04

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன் 05

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பரம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள் 06

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே 07

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே 09

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை 10

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய 11

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் 12

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப் 13
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே 14

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின் 15

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய் 16

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று 17

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 19

**கண்ணுக்குத் தெரிந்த**
**மனிதரை**
**மதிக்காவிட்டால்**
**கண்ணுக்குத் தெரியாத**
**கடவுளை மதித்தும் பயன் இல்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலபைரவர் 108 போற்றி

தினமும் அல்லது தேய்பிறை அஷ்டமி திதியில் இந்த பைரவர் 108 போற்றியை சொல்லி பைரவர் வழிபாடு செய்தால் கஸ்டங்கள் படிப்படியாக குறையும். அந்த 108 மந்திரத்தை கீழே பார்க்கலாம். தேய்பிறை அஷ்டமி திதியில் பைரவர் வழிபாடு செய்வது பயத்தைப் போக்கி, வாழ்வில் தன்னம்பிக்கையைத் தரும். இந்த நாளில் மாலை 4.30 – 6.00 மணிக்குள் திருவிளக்கேற்றி வீட்டிலேயே இந்த 108 போற்றியைச் சொல்லலாம். பைரவர் சன்னதி முன்பு கூட்டாக அமர்ந்து ஒருவர் சொல்ல மற்றவர்கள் திருப்பிச் சொல்லலாம்.

ஓம் பைரவனே போற்றி
ஓம் பயநாசகனே போற்றி
ஓம் அஷ்டரூபனே போற்றி
ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
ஓம் அயன்குருவே போற்றி
ஓம் அறக்காவலனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அடங்காரின் அழிவே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அசிதாங்க பைரவனே போற்றி

ஓம் ஆனந்த பைரவனே போற்றி
ஓம் ஆலயக்காவலனே போற்றி
ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
ஓம் இடுகாட்டில் இருப்பவனே போற்றி
ஓம் உக்ர பைரவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் உடுக்கை ஏந்தியவனே போற்றி
ஓம் உதிரம் குடித்தவனே போற்றி
ஓம் உன்மத்த பைரவனே போற்றி
ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பவனே போற்றி

ஓம் எல்லை தேவனே போற்றி
ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
ஓம் கபாலதாரியே போற்றி
ஓம் கங்காளமூர்த்தியே போற்றி
ஓம் கர்வபங்கனே போற்றி
ஓம் கல்பாந்த பைரவனே போற்றி
ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல்வீசும் கண்ணனே போற்றி
ஓம் கருமேக நிறனே போற்றி
ஓம் கட்வாங்க தாரியே போற்றி

ஓம் களவைக் குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் கால பைரவனே போற்றி
ஓம் காபாலிகர் தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல்தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப் பிரியனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சண்ட பைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்து இருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீர்காழித் தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி

ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினை அறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தட்சனை அழித்தவனே போற்றி
ஓம் தலங்களின் காவலனே பாற்றி
ஓம் தீது அழிப்பவனே போற்றி
ஓம் துர்சொப்பன நாசகனே போற்றி

ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரச ரூபனே போற்றி
ஓம் நரசிம்ம சாந்தனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி

ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி
ஓம் பயங்கரஆயுதனே போற்றி
ஓம் பகையளிப்பவனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பலிபீடத்து உறைவோனே போற்றி
ஓம் பாபம் தீர்ப்பவனே போற்றி
ஓம் பால பைரவனே போற்றி
ஓம் பாம்பணிந்த தெய்வமே போற்றி
ஓம் பிரளயகாலனே ஓம் போற்றி

ஓம் பிரம்ம சிரச்சேதனே போற்றி
ஓம் பூஷண பைரவனே போற்றி
ஓம் பூதங்களின் நாதனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பைராகியர் நாதனே போற்றி
ஓம் மல நாசகனே போற்றி
ஓம் மகோதரனே போற்றி
ஓம் மகா பைரவனே போற்றி
ஓம் மலையாய் உயர்ந்தவனே போற்றி
ஓம் மகா குண்டலனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் மார்த்தாண்ட பைரவனே போற்றி

ஓம் முக்கண்ணனே போற்றி

ஓம் முக்தியருள்வோனே போற்றி

ஓம் முனீஸ்வரனே போற்றி

ஓம் மூலமூர்த்தியே போற்றி

ஓம் யமவாதனை நீக்குபவனே போற்றி

ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி

ஓம் ருத்ரனே போற்றி

ஓம் ருத்ராட்சதாரியே போற்றி

ஓம் வடுக பைரவனே போற்றி

ஓம் வடுகூர் நாதனே போற்றி

ஓம் வடகிழக்கு அருள்வோனே போற்றி

ஓம் வடைமாலைப் பிரியனே போற்றி

ஓம் வாரணாசி வேந்தே போற்றி

ஓம் வாமனர்க்கு அருளியனே போற்றி

ஓம் விரும்பியதை அருள்வோனே போற்றி

ஓம் விபீஷண பைரவனே போற்றி

ஓம் வீழாமல் காப்பவனே போற்றி! போற்றி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை

## காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிகநிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

1. வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கை யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு(து)
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சித்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படிநின் கடைக்கண் நல்காய்
உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சொற்கும் பொருட்கு உயிராம்
மெஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# திருப்பள்ளியெழுச்சி

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

2. அருணன்இந் திரன்திசை அனுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

3. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்போடு நமக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

5. பூதங்கள் தோறுமநின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னை
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

6. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார் அணங் கின்மண வாளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னைவ துங்காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெருமான பள்ளி எழுந்தரு ளாயே.

10. புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

மனிதன் மரணத்தை மறந்தாலும்,
மரணம் மனிதனை மறப்பது இல்லை
ஆகவே, மரணம் நெருங்கும் வரை
மனித நேயத்துடன் இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒள்நித் திலநகையாய் இன்னம்புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

5. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோ தாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

6. மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் ணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திற
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந்தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலை
வாழீயீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோர் எம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைசிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சஞ்சுகஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து உழடயாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

18. அண்ணை மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத் போல்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரரைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு) இப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 01

பூவியில் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 02

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 04

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றித்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்கெளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 05

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 07

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 08

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் அடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்னூசல்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைப்பாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. 01

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. 02

முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம் நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 03

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணை செய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோனார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. 05

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோட வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 06

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 07

கோலவரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 09

அமரர் கா.திருப்பதி அவர்களின் ஆத்ம சாந்திக்காக இப்பக்திப் பனுவல்களைப் பாடித் துதிப்போமாக......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி அவர்களின்

# வாழ்க்கைப் பயணம்

**கலாநிதி திருப்பதி ஆசிரியர் அவர்கள் பன்முக அறிவும் ஆற்றல்களும் வாய்க்கப் பெற்று பூரண மனிதராக வாழ்ந்து சுகந்த வாசம் பரப்பிய ஒப்புரவாளர்.**

இலங்கையின் ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணப் பிரதேசம் பல்வேறு நிலைகளில் ஓர் புண்ணிய பூமியாக விளங்கி இருக்கிறது. இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் திருத்தலங்கள், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றோடு கூடி அமைந்து மனித குலத்தையும் உயிர் குலத்தையும் வாழ வைக்கும் திருக்கோயில்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் திரும்பிய பக்கமெல்லாம் இராஜகோபுரங்களோடு காட்சி தரும் கோலம் மக்களை நம்பிக்கையோடும் நலமோடும் வாழ வைக்கின்றது.

ஐம்பூதங்களின் நிர்மாணம் அற்புதமாக இம்மண்ணில் இறைவனால் சிருஸ்டிக்கப்படுகின்றது. அலை ஓங்கும் கடலலை பிரதேசத்தைச் சூழவும் அமைந்து நலமான சுவாசம் முதலாக பல நலன்களை படைத்து நிற்கின்றது. நில வளமும் நன்னீர் வளமும் பிரதேசத்தை உயர்வாகவும் சுமாராகவும் வளப்படுத்தி மக்களை சுறுசுறுப்பானவர்களாக வாழ வைக்கின்றன. செந்நெல் களனிகளும், விவசாய மேட்டுத்தோட்டங்களும் மாஞ்சோலைகளும் முதலான கனி தரும் வானுயர்ந்த மரம், கொடி, செடிகளும் அவற்றோடு மங்கலம் சேர்க்கும் வாழைத்தோட்டங்களும் பிரதேச மக்களை சுகமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியும் சுமூகமான மக்கள் சமூகத்தை மேலும் மனித மாணிக்கங்களாகக்குவதற்காக அறிஞர்களாலும் ஞான தருமவாள்களாலும் ஞானிகளின் ஆலோசனைகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட அறிவுச்சாலைகளான பாடசாலைகள், கல்லூரிகள், சர்வகலாசாலைகள், மக்கள் சுகம் பேணும் வைத்திய சுகாதார வளாகங்கள்யாவும் ஒன்றமைந்து நல் மனிதர்களாகத் தொடர்ந்தும் வாழ வைக்க திடமாக இன்னும் இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்கின்றன. இவை அத்தனையின் சேவையில் பயன்பெற்று வாழும் மனித குலம் இன்னும் அன்பாகவும் அமைதியாகவும் வாழ யாழ்ப்பாணத்தில் அவாவி நிற்கின்றமை நம்பிக்கைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் மத்தியில் அமைந்த கிராமமாக விளங்குவது கோப்பாய்க் கிராமம். கிழக்கில் தொண்டமனாறு கடல்நீரேரியும் மேற்கில் உரும்பிராய்க் கிராமத்தையும் வடக்கில் நீர்வேலிக் கிராமத்தையும் தெற்கில் கல்வியங்காட்டையும் எல்லைகளாகக் கொண்டது கோப்பாய்க் கிராமம். சிவந்த செந்நிறமான மண்ணும் குளிர்ந்த சுவை மிக்க நன்னீரும் சமதரை இயற்கை அமைப்பும் இன்னறுங்கனிச் சோலைகளும் வானளாவிய கற்பகத் தருக்களும் கோப்பாய்க் கிராமத்தை வனப்புச் செய்யும் வழங்களாக முதன்மை பெற்றுள்ளன. மூத்தோர், முதியோர் அறம் பேணும் ஆன்மீக ஞானிகள், கற்றறிந்த கல்விமான்கள், கலைஞர்கள் உயர்நிலை முதலான அரச ஊழியர்களை ஆசிரிய சமூகத்தினர் விவசாயப் பெருமக்கள் பல்வேறு தொழில் வள மக்கள் குழுமங்கள் எனப் பல்வேறு சகோதர மக்கள் குழுமங்கள் நிறைந்த வளமார்ந்த கிராமம் கோப்பாய் என்பதன் மூலம் இவை தந்த இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஸ்டானங்களுக்கும் விரத வணக்கத்திற்கும் உரியராகி நிறைந்த ஆலயங்களில் கோயில் கொண்டு கிராமத்தை வாழ வைக்கின்றார்.

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட இக்கோப்பாய் கிராமத்தின் கோப்பாய் வடக்கு பெரும்பாகக் கட்டுப்பலானைக் குறிச்சியில் ஞான வைரவர் ஆலயப்பற்றில் விவசாயக் குடும்பத்தில் கார்த்திகேசு இரத்தினம் குடும்பம் குணத்தில் குன்றிலிட்ட தீபமாக வாழ்ந்தது. இவர்களின் இல்லற தர்மத்தில் திருச்செல்வம், பார்வதிப்பிள்ளை, திருமகள், திருப்பதி, ஞானபண்டிதன் ஆகிய மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் பிள்ளைச் செல்வங்களாக வாய்க்கப் பெற்றனர். இறை அருளாசியினாலும் பெற்றோரின் இல்லறப் பேரன்பினாலும் வளர்ந்து கற்றுத் தேறினார். மூத்த புதல்வர் திருச்செல்வம் அவர்கள் ஆசிரியராகி ஆரம்பத்தில் தென்னிலங்கையிலும் பின்னர் கோப்பாயிலும் பெரும் பணியாற்றினார். பார்வதிப்பிள்ளை, திருமகள் இரு பெண் பிள்ளைகளும் கற்றுத் தேறிய நிலையில் இல்லற தர்மத்தில் இசைந்து வாழ்ந்து வருகின்றனர்.

கலாநிதி திருப்பதி அவர்களின் சகோதரர் ஞானபண்டிதன் அவர்கள் பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றிய பின்னர் பிரான்ஸ் நாட்டிற்கு சென்று அங்கு குடும்ப சகிதம் நலமோடு சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

திருப்பதி அவர்கள் இறை திருநாமத்திற்கு அமைய 23.06.1958 அன்று குழந்தையாக இவ்வுலகைத் தரிசித்திருந்தார். கற்றறிந்து பண்புடை மனிதராகவும் வாழ்ந்து கல்வியில் திறமையும் விவேகமும் அவரை உய்விக்க BA, M.Phil, Phd வரையான கலாநிதிப்பட்டம் பெற்று நல்லாசானாகி வாழ்ந்தார்.

திருப்பதி அவர்கள் சிறுவயதிலிருந்தே இறைபக்தி மிக்கவராகவும் ஆலய வழிபாட்டில் ஈடுபாடுடையவராகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் பாடுவதிலும் பஜனைகள் பாடுவதிலும் வல்லவராக விளங்குகின்றார். கிராமத்து ஆலயங்களில் வெள்ளிக் கிழமைகளிலும், மகோற்சவம் மற்றும் விசேட தினங்களிலும் பஜனைக் குழுவில் இணைந்து பாடுவதும் அவர்களுக்கு முன்னோடியாகவும் செயற்படுவதினால் அவரது குரல் அடியவர்கள் மனதில் பக்தி உணர்ச்சியை மேன்மேலும் வளப்படுத்துவதில் வல்லமை மிக்கதாக விளங்கியது.

கட்டுப்பலானை, ஞானவைரவர் பெருமானின் பக்தராக சிறுவயதில் இருந்தே விளங்கினார். அப்பொழுதிருந்தே அவ் ஆலயத்தின் தொண்டராகவும் திருவிளக்கேற்றி பூசைகள் செய்வதிலும் ஈடுபாடுடையவராக விளங்கினார். அவரது தாயார் அவர்கள் சிறந்த இறை பக்தராக விளங்கி இவருக்கு வழிகாட்டியாகவும் ஆதரவுடையவராக விளங்கியதும் காரணமாக அமைந்திருந்தது. வெள்ளிக்கிழமைகளில் மாலையில் வைரவர் ஆலயத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், பெண் அடியவர்கள் அனைவரும் இவரது பஜனையிலும் கூட்டு வழிபாட்டிலும் இணைந்து செயற்பட்டனர். ஆலயத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு அவர் மூலமாக விளங்கி அதன் பரிபாலனத் தலைவராகவும் தன் இறுதி மூச்சு வரை தொண்டாற்றினார்.

திருப்பதி அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்திலும் பின்னர் உயர்தரக் கல்வியை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கற்றார். பாடசாலைக் கல்வியின் போது இணைபாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றி சான்றிதழ்களையும் வெற்றிக் கேடயங்களையும் பெற்றிருந்தார். தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகள், இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிக்கேடங்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தார். அவர் தமது மாணவப் பருவத்தில் பிரகாசமான, திறமையானவராகவே விளங்கியிருந்தார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராகப் பதிவாகி பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணிப்பட்டத்தைப் பெற்றிருந்தார். இதனையடுத்து 02.05.1989 இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று தமது முதல் ஆசிரியப்பணியை கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். ஆசிரியர் திருப்பதி அவர்கள் ஆசிரியர் கடமையில் இருந்த போது "கற்றுக் கற்றுக் கற்பி கற்பி" என்னும் பயனுறு கற்பித்தலின் தத்துவத்திற்கமைய முதுதத்துவமாணிக் கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2008 ஆம் ஆண்டு முதுதத்துவமாணிக் கற்கையை பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழைப் பெற்றிருந்தார்.

கலாநிதி திருப்பதி அவர்கள் தமது கல்வியை மேலும் தொடர்ந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். ***"மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றிய ஒப்பியல் ஆய்வு"*** என்ற தலைப்பில் 09.10.2017 இல் ஆய்வினை சமர்ப்பித்து 22.01.2019 இல் "கலாநிதி" என்ற பட்டத்தோடு பல்கலைக்கழகச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார். இது அவரது ஆசிரிய சேவைக்கும் கோப்பாய் கிராமத்திற்கும் கல்வி உலகிற்கும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.

திருப்பதி ஆசிரியர் அவர்கள் தமது ஆசிரியப் பணியை மேற்கொண்ட பாடசாலைகள்

1. கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் 09.05.1989–31.05.1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கிளி/பளை மத்திய கல்லூரி 01.06.1993–11.01.1996

3. கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் 12.01.1996–08.08.2002

4. யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 09.08.2002–23.10.2012

5. யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் 24.10.2012–22.06.2018

கோப்பாயில் அவர் ஆசிரியராகக் கற்பித்த போது அவரது கற்பித்தல் திறமையும் அவரது ஆற்றல்களும் பாடசாலைச் சமூகத்தினரால் நன்கு உணரப்பட்டது. குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரிய சமூகத்தினர் அவரை நன்கு மதிப்பிட்டு அவர் மீது நன்மதிப்பையும் கௌரவத்தையும் கொண்டிருந்தனர்.

திருப்பதி ஆசிரியர் அவர்கள் மண்டைதீவைச்சேர்ந்த கந்தலிங்கம் தையல்நாயகி தம்பதிகளின் மூத்த புத்திரியாகிய சாந்தி அவர்களை 21.04.1989 அன்று திருமண பந்தத்தில் இணைந்து மங்கலகரமாக குடும்பத்தில் மகிழ்வோடு வாழ்ந்தார். துணைவியார் சாந்தி அவர்களது சகோதரர்களாக சாந்தகுமார், உதயகுமார், சதீஸ்குமார் ஆகியோரை மைத்துனர்களாகவும் உற்ற உறவுகளாகவும் திருப்பதி அவர்கள் பெற்றிருந்தார்.

இவர் 2015 ஆம் ஆண்டு "பெரியாழ்வாரும் மாணிக்கவாசகரும் கையாண்ட பொருளணி உத்திகள்" என்ற ஆய்வை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு மேற்படி தலைப்பைக் கொண்ட நூல் ஒன்றையும் சைவ உலகிற்கு வழங்கியிருந்தார்.

இதுமட்டுமல்லாது 2016 ஆம் ஆண்டு "திருவாசகத்தில் வெளியீட்டுநிலை உத்தி" மற்றும் "திருவாசகத்தில் மொழிநடை உத்தி" ஆகிய இரண்டு ஆய்வு வெளியீடுகளையும் மேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறைக்கு சமர்ப்பித்திருந்தார். இவரது இரண்டு ஆய்வுகளும் சர்வதேச முதலாவது இந்துமாநாட்டில் வெளியீடு செய்யப்பட்ட மாநாட்டு ஆய்வரங்கல் நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி திருப்பதி அவர்கள் 23.06.2018 இல் தமது 29 வருட ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். அவர் ஓய்வு பெற்ற போது யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை சமூகம் அவரைக் கௌரவித்து மணிவிழாவை சிறப்பாக கொண்டாடியிருந்தார்கள்.

இவர் ஓய்வு பெற்ற பின்னரும் தமது கல்வியையும், கல்வி ஆய்வையும் அவர் தொடர்ந்தார். 2020 ஆம் ஆண்டில் "திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்" என்ற ஆய்வை மேற்கொண்டு அப்பெயரிலேயே ஆய்வை வெளியீடு செய்திருந்தார். மேற்படி ஆய்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமாகிய கலாநிதி.ம.இரகுநாதன் அவர்களது மேற்பார்வையில் மேற்கொண்டிருந்தார். வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாகாணத்தின் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட ***"திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்"*** (ஆய்வுநூல்) என்னும் நூலின் ஆசிரியரான கலாநிதி.கா.திருப்பதி அவர்களைக் கௌரவித்து 22.03.2021இல் நினைவுச்சின்னமும், சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் ஆற்றலுக்கும் அறிவிற்கும் கிடைத்த சான்றாக வெளிப்பட்டு நிற்பது பாராட்டிற்குரியதாகும்.

இவற்றிற்கும் மேலாக திருப்பதி ஆசிரியர் அவர்களுக்கு 2023 இல் மன்னார் சங்கவி பிலிம் நிறுவனத்தினர் திருப்பதியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் மதித்து ***"உலகத் தமிழர்"*** விருதினை வழங்கிக் கௌரவித்ததுடன் ***"தேசிய கலா விபூஷணம்"*** என்ற உயர் விருதினையும் இவருக்கு வழங்கியிருந்தமை பாராட்டிற்குரியதாகும்.

ஒரு சிறந்த மாணவனாகவும், நண்பனாகவும், ஆசிரியராகவும், ஆன்மீகவாதியாகவும், திருமுறைகளின் பக்தியாளராகவும், ஆய்வாளராகவும், எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், நற்சமூகவாதியாகவும் ஒட்டுமொத்தத்தில் பூரண மனிதராகவும் வாழ்ந்து சிறந்து சுகந்தவாசம் பரப்பிய ஒப்புரவாளராவார்.

கலாநிதி திருப்பதி அவர்கள் இவ்வுலகிற்கு வழங்கிய செய்திகள் சாதனைகள் யாவும் அவரை ஓர் உயர்ந்த நூலுக்கு சமமானவராகக் காண்பிக்கின்றது. ஆயினும் 16.05.2023 அன்று சற்றும் எவரும் எதிர்பாராத நிலையில் திடீரென இவ்வுலகை விட்டுப்பிரிந்தமை எம் எல்லோருக்கும் வேதனைக்குரியது. அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அவர் நேசிக்கும் ஞான வைரவப்பெருமானது பாதங்களில் சென்றடையப் பிரார்த்திப்போம்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமரர் கலாநிதி திருப்பதி அவர்களின் திருமணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுடன்.....




மாமனார், மாமியாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் சகோதரர்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் பின்னர் புதுமணத் தம்பதிகளாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கோப்பாய் வாழ் கிராமத்திலே சைவத்திற்கும் தமிழிற்கும் என தன்னை அர்ப்பணித்த பெரியவர்களில் முக்கிய இடம் வாய்ந்தவர். அமரர் கார்த்திகேசு திருப்பதி இவர் ஒரு ஆசிரியராக மட்டுமல்லாது நிறைந்த கடமையுணர்வு கொண்டதுடன் சைவத்தமிழ் பற்றும் உள்ளதை உள்ளபடி சொல்வதுடன் தெரியாத விடயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்வதில் இவருக்கு நிகர் இவரே. இவர் ஆலயத்திற்குச் செய்யும் தொண்டுகளில் பஜனை பாடுதல் என்பதும் இளைய தலைமுறையினரையும் பஜனை பாடுதலில் இணைத்து தான் ஒரு முன் உதாரணமாக திகழ்ந்தார். இவர் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் முழுமனதுடன் அதனை நிறைவேற்றுவதுடன் பஜனை வழிபாட்டோடு மட்டும் நின்றுவிடாது சிறுவர்களுக்கு சமய வழிகாட்டுதல், ஆலயத்தில் தொண்டு செய்தல் போன்றன மூலம் ஆலய வளர்ச்சிக்கு முன்நின்று சேவையாற்றியவர். இவரது இழப்பு கோப்பாய் கிராமத்துக்கே ஒரு மாபெரும் இழப்பு. அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளின் பாதார விந்தங்களைச் சென்றடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

சிவஸ்ரீ.பரமசண்முகராஜக்குருக்கள்
கோப்பாய் பலானை கண்ணகை
அம்மன் தேவஸ்தானம்
கோவையாதீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் சக்கராழ்வாரின் இறைபக்தன் திருப்பதி அவர்கள்.

அமரர் கார்த்திகேசு திருப்பதி அவர்கள் அனைவராலும் போற்றப்படுபவராகவும் மதிக்கப்படுபவராகவும் தான் வாழ்ந்த காலத்தில் மனிதப்பண்புகளைத் தன்னகத்தே கொண்ட ஒருவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். தான் தனது குடும்பம் என்கின்ற குறுகிய எல்லையைத் தாண்டி உறவினர், அயலவர், ஊரவர் என்கின்ற பரந்த எல்லையை நோக்கி பயணிக்கும் பண்பு கொண்டவராக தனது வாழ்வியல் முறையினை அமைத்துக் கொண்டவர்.

இவர் தனது ஆசிரியப்பணியை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்து கொண்டிருந்த வேளையிலும் கூட கோப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள கோயில்களில் இறைபக்தியுடனும் விருப்பத்துடனும் சிறுவயதில் இருந்தே பஜனை பாடுவதில் இவருக்கு நிகர் இவரே. அந்தவகையில் கோப்பாய் சக்கராழ்வார் கோயிலிலும் பஜனை பாடுதல், தொண்டு செய்தல் போன்ற கருமங்களை சிறப்பாகச் செய்து முடிப்பவர். எமது ஆலயத்தில் நடைபெறும் மாதாந்தப் பூசைக்கு திருப்பதி ஆசிரியர் அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளை அவருடைய உயிர் பிரிந்தமையை நினைக்கும் போது தான் வேதனையை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து கொண்டிருந்த இவரின் திடீர் மறைவு எல்லோரையும் மிக மனவேதனையடையச் செய்துவிட்டது. இவரது ஆத்மா சாந்தியடையவும் துயருறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தாருக்கு ஆறுதல் கிடைக்கவும் எல்லாம் வல்ல சக்கராழ்வாரை வேண்டிக்கொள்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த திருப்பதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாக இணைந்து கலைமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட கார்த்திகேசு திருப்பதி 2005 ஆம் ஆண்டு தமிழ்த்துறையில் முதுதத்துவமாணிப்பட்ட மாணவனாக எனக்கு அறிமுகமானார். இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால் பகுதி நேர ஆய்வு மாணவனாகவே பதிவு செய்திருந்தார். ***"திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் பற்றிய ஆய்வு"*** என்னும் பொருளில் அமைந்த இவரது ஆய்வுக்கு நெறியாளனாக நான் நியமிக்கப்பட்டிருந்தேன். நவீன இலக்கியம், விமர்சனம் முதலிய துறைகளிலேயே அதிகளவு ஈடுபாடு கொண்டிருந்த எனக்கு திருப்பதியின் பக்தி இலக்கியம் தொடர்பான ஆய்வு புதிய அனுபவமாகவே இருந்தது. தளராத ஊக்கமும் தணியாத வேட்கையும் கொண்டிருந்த திருப்பதி வெகு விரைவிலேயே என்னைத் தன்வசப்படுத்திக் கொண்டார். ஆய்வுத்தேடலும் கலந்துரையாடலும் காலநேரம் பார்க்காத பணியாக எம்மைத் தொற்றிக் கொண்டது. மூன்று ஆண்டுகளில் அதாவது 2008 இல் திருப்பதியின் ஆய்வு நிறைவு பெற்றது. ஆய்வேட்டினைப் பரீட்சித்த தேர்வாளர்கள் மிகச் சிறந்த ஆய்வாக இதனைப் பரிந்துரைத்திருந்தனர். இது அவருக்கு மட்டுமன்றி எனக்கும் பெருமையைத் தேடித் தந்தது. இந்த மகிழ்ச்சி அவரை உடனடியாகவே கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டியது. ***"மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் - ஓர் ஒப்பியல் ஆய்வு*** என்னும் தலைப்பில் இவர் கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்விற்கும் நானே நெறியாளனாக நியமிக்கப்பட்டிருந்தேன். மாணிக்கவாசகரின் திருவாசகமும் பெரியாழ்வாரின் திருப்பாசுரங்களும் திருப்பதியின் அகோரப்பசிக்கு ஈடுகொடுக்க முடியாமல் போக மிகவும் குறுகியகால இடைவெளியில் 2017இல் இவர் தனது ஆய்வை நிறைவேற்றிக் கொண்டார். இதன் மூலம் ***கோப்பாய் பிரதேசத்தில் தமிழ்த்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற முதல் ஆய்வாளர்*** என்ற பெருமையினையும் இவர் தனதாக்கிக் கொண்டார்.

திருப்பதி ஆய்வு மாணவனாக என்னிடம் வந்ததன் பின் முழுமையான உயர் பட்டங்கள் இரண்டை அவர் பெற்றுக்கொண்டார். இவரது முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வேடு பின்னர் நூலாகவும் பிரசுரிக்கப்பட்டது. கோப்பாயில் இந்நூலுக்கு நடைபெற்ற வெளியீட்டு நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன். அந்த நிகழ்வு திருப்பதியின் சமூகத் தேவையை எனக்கு அப்போது உணர்த்தியது. சாதாரண ஆசிரியராக இருந்த திருப்பதியை கலாநிதி.கா.திருப்பதியாக மாற்றியதால் திருப்பதியை விட கோப்பாய்க் கிராமம் பெரிதும் மகிழ்ச்சியடைந்ததைக் கண்டு உள்ளம் பூரித்தேன். திருப்பதி பட்டப்பேற்றிற்கான ஆய்வுகளை விட தனித்தும் என்னோடு இணைந்தும் ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவை அனைத்துலக மட்டத்திலான ஆய்வரங்குகளில் படிக்கப்பட்டன என்பதுடன் அவருக்குப் புகழையும் தேடித் தந்தன.

திருப்பதியின் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வு நூலாக வெளிவந்த போது வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் 2020இல் சிறந்த நூலுக்கான பரிசும் வழங்கப்பட்டது. 2023 இல் மன்னார் சங்கவி பிலிம் நிறுவனத்தினர் திருப்பதியின் எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் மதித்து ***"உலகத் தமிழர்"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதினை வழங்கிக் கௌரவித்ததுடன் ***"தேசிய கலா விபூஷணம்"*** என்ற உயர் விருதினையும் இவருக்கு வழங்கியிருந்தனர்.

ஆசிரியராகவே தனது பணியைத் தொடர்ந்த திருப்பதிக்கு 2017 இல் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ***"குரு பிரதிபா பிரபா"*** என்ற நல்லாசிரியருக்கான விருதினையும் வழங்கியிருந்தது. இது ஆசிரிய சேவையில் இவருக்குக் கிடைத்த உயர் கௌரவமாகும்.

சற்றும் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட இழப்பால் கோப்பாய் பிரதேசம் ஒரு கல்வியாளனை, சமூகசேவையாளனை, சமயத்தொண்டனை இழந்து நிற்கின்றது; கல்விப்புலம் ஒரு சிறந்த ஆய்வாளனை இழந்து நிற்கின்றது; மாணவ உலகம் ஒரு சிறந்த ஆசிரியரை இழந்து ஏங்கி நிற்கின்றது; நானோ ஆய்வுப் பயணத்தில் எனக்குக் கிடைத்த அரியதொரு நண்பனை இழந்து நிற்கின்றேன். எங்கிருந்தோ வந்தான்; என்னோடு தன்னையும் இணைத்துக் கொண்டான்; மாணவனாய் வந்து நல்லதொரு நண்பனாய் மாறி இதயத்தில் தனக்கென ஓரிடத்தை எடுத்துக் கொண்டு சொல்லாமலே சென்றெங்கோ மறைந்து விட்டான். போன திசை தெரியாமல் உங்களோடு நானும் ஒருவனாய் அவனைத் தேடுகின்றேன். அவன் மீண்டும் ஒருமுறை வரமாட்டானா என்ற ஏக்கத்துடன் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றேன் திருப்பதி! உனது வழித்தடங்கள் தமிழ் கூறும் நல்லுலகிலும், உனது மாணவ நெஞ்சங்களிலும், உன்னை நேசிக்கும் அன்பு இதயங்களிலும் என்றும் ஆழப்பதிந்திருக்கும். அவை அழிக்க முடியாதவை. ஆதலினால் நீ என்றும் எம்மோடுதான் வாழ்வாய் என்ற நம்பிக்கையோடு நாங்கள் அமைதியடைகின்றோம்.

பேராசிரியர். கலாநிதி.ம.இரகுநாதன்,
சிரேஷ்ட பேராசிரியர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பான சேவையாளன்

# அமரர். கார்த்திகேசு திருப்பதி

கல்வி உலகில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய தமிழாசான் அமரர்.கா.திருப்பதி அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாதது. சைவத்தையும் தமிழையும் வளர்த்த பண்டிதர்கள் பலர் வாழ்ந்த கோப்பாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர் எங்களுடைய திருப்பதி ஆசிரியர். அந்தக் கிராமத்துக்கே உரிய தனித்துவமான பண்புகள் அவரிடம் நிறைவாகக் காணப்பட்டன.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் நான் அதிபராகக் கடமையாற்றிய போது அங்கே தமிழ்ப்பாட ஆசானாக அவரைச் சந்தித்தேன். இலக்கியத்தையும் இலக்கணத்தையும் மாணவர் மனங்களிலே பதியும் வகையில் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். எல்லாப் பிள்ளைகளையும் மிக நுணுக்கமாக அவதானித்து அவரவர் நிலையறிந்து கற்பிக்கும் திறன் தனித்துவமானது. பாடசாலைப் பரீட்சைப் பெறுபேறுகளின் உயர்ச்சியில் அவரது பணி மிகப் பிரதானமானதாகும்.

இத்தகைய சிறப்புக்கள் மிக்க ஆசான். கல்விப்பணியுடன் மட்டும் நின்று விடாமல் சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். பாடசாலையின் நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு முன்னின்று உழைத்தார். பரிசளிப்பு விழாக்குரிய முழுநிதியையும் திரட்டுவதற்குத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு பரிசளிப்புவிழா சிறப்பாக இடம்பெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய பெருந்தகை என்றால் மிகையாகாது. நான் அதிபராக இருந்த காலப்பகுதியில் பாடசாலையின் வளர்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் என்னுடன் சேர்ந்து பயணித்த ஒரு புனிதமான ஆத்மா அமர உலகு அடைந்து விட்டது.

அன்னார் வாழும் காலத்தில் பலர் பயனுற வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் தனது இறுதிக்காலம் வரை தானும் கல்வியால் உயர்வு பெற்ற பெரியார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் "திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்" என்னும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு கலாநிதிப்பட்டம் பெற்ற சிறப்புக்குரியவர். தான் பெற்ற கல்விச்செல்வத்தை இறுதிவரை மாணவச் செல்வங்களுக்கு வழங்கிக்கொண்டே இருந்த புலமையாளன்.

இறைபக்தி, இரக்க சிந்தை, தயாளகுணம், பண்பு, பணிவு என அமரரின் இயல்புகளைக் கூறிக்கொண்டே செல்லலாம். கோப்பாய் கிராமத்திலுள்ள ஆலயங்களின் மீளா அடியவர்.

கோப்பாய் சித்திரவேலாயுதர் ஆலய வீதியில் அவருடைய வாழ்விடம் அமைந்தமையால் தீவிரமான முருக பக்தனாக விளங்கினார். ஆலயச்சூழலில் உள்ள சிறுவர்களை இறைநம்பிக்கையுடையவர்களாக வளர வேண்டும் என்ற நோக்கில் அவர்களை அழைத்து ஆலய பஜனைகளில் இணைத்துக் கொண்டார். கிராமத்து உறவுகளின் இன்பதுன்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டு முன்னின்று உழைத்தார். அவருடைய அன்புத் தாயார் நோய்வாய்ப்பட்டு இருந்த போது அவருடைய இறுதிக்காலம் வரை மிகச்சிறப்பாகப் பராமரித்தார். இவ்வாறு நல்ல பல அரிய பணிகளை ஆற்றிய ஆசானின் திடீர் மறைவு எம் எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கவிஞன், சொற்பொழிவாளன், எழுத்தாளன் எனப் பல்பரிமான ஆளுமையள்ள ஆசான் என்றும் போற்றுதற்குரியவர். அன்னாரின் ஆத்மா அமர உலகில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

அதிபர்
திரு.அ.ஆனந்தராசா
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்க்கு எமது அன்பான சமர்ப்பணம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

இயற்கை வளமும் இறையுணர்வும் ஓங்கி நிற்கும் கோப்பாய்ப் பதியில் உதித்து பிரகாசித்து மறைந்த அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி அவர்களின் இழப்பு கல்விச்சமூகத்திற்கும் கோப்பாய்ப் பிரதேசத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் சமூகத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கு முன்னோடியாக வழிகாட்டியாக வாழ்ந்தவர். கல்விப்பணியில் உச்சம் தொட்ட பேராசான் ஆசிரியப் பணியில் உயர்ந்து விளங்கியவர். கலைமாணி (BA), முதுதத்துவமாணி (M.phil), கலாநிதி (PHD) முதலிய பட்டங்களைப் பெற்ற பேராசான். ஆய்வுக்கட்டுரைகளையும் அற்புதமாக சமர்ப்பித்து தனது தகைமையை சான்றுப்படுத்தியவர். இவரது கல்விப் புலமைகளைக் கண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இவரைப் பாராட்டி கௌரவித்து பாராட்டுப் பட்டங்களையும் வழங்கியுள்ளது.

எமது பாடசாலையின் தமிழ்த்துறையின் வளர்ச்சியில் இவரது பங்களிப்பு காத்திரமான இடத்தை வகிக்கின்றது. அதுமட்டுமன்றி எமது பாடசாலை பழைய மாணவனாக இருக்கும் இவர் பௌதிகவள அபிவிருத்தியிலும் கல்வி அபிவிருத்தியிலும் பல்வேறு பங்களிப்புக்களையும் ஒத்தாசைகளையும் வழங்கிய ஒரு செயல் வீரனாவார். இப்படிப்பட்ட பேராசானை இழந்தது இவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல எமது பாடசாலைக்கும் கோப்பாய் சமூதாயத்திற்கும், கல்விச்சமூகத்திற்கும் ஒரு ஈடுசெய்ய முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பாகும். இவரின் கல்வி மற்றும் ஆன்மீகப் பணிகள், ஆலயப்பணிகள், சமூகப்பணிகள் ஆகியன அவரது அத்மார்த்த வாழ்வின் முக்கிய மைக்கற்கள் ஆகும். அவரது சமய, சமூக, ஆன்மீகக் கல்விப் பணிகளைத் தொடருவதே அவருக்கு நாம் செய்கின்ற அஞ்சலி ஆகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

அதிபர்,
திருமதி.பி.ஜெயரட்ணராஜா
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

## தியாகம்

ஒரு தீக்குச்சி ஒரு வினாடி தியாகம் செய்ததால்
மெழுகுவர்த்தி சில நிமிட நேரம் உயிர்
வாழ்கிறது. மெழுகுவர்த்தி பல நேரம்
தான் எரிந்து தியாகம் செய்வதால்
அதில் படிப்பவன் கல்விமான் ஆகின்றான்.
இக்கல்விமான் பல நாட்கள் தியாகம் செய்வதால்
பெரும் தேசம் ஒன்று வளர்ச்சி பெறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக, சமூக, ஆசிரிய நிலைகளில் மனித ஜோதியாக வாழ்ந்தவர் கலாநிதி திருப்பதி அவர்கள்.

கோப்பாய் வடக்கு கட்டுப்பலானையைச் சேர்ந்த கார்த்திகேசு திருப்பதி ஆசிரியர் அவர்கள் ஆன்மீகத்திலும் இறைவழிபாட்டிலும் அரிய தொண்டராகவும் ஆசிரியத்தில் கற்போரிடம் உள்ளம் நிறைந்த ஆசானாகவும் சமூகத்தில் தெளிவான உறுதியான பணிவுடை சான்றோனாகவும் எளிமையின் மகுடமாகவும் முன்னுதாரமான புருசராகவும் வாழ்ந்த பெருந்தகையாளர்.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்தவரான ஆசான் திருப்பதி அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்வார் எனப்பல அன்புள்ளங்களால் எதிர்பார்க்கையுடன் நோக்கப்பட்டிருந்த வேளையில் சற்றும் எதிர்பாராமல் 16.05.2023 அன்று தீடீரென இவ்வுலக வாழ்வை நீங்கிக் கொண்ட செய்தி அனைவரது உள்ளங்களிலும் அதிர்ச்சிச் செய்தியாகவும் உள்ளங்களைப் புரட்டிப் போட்டதுடன் உள்ளங்கள் உள்ளங்கள் நம்பமுடியாமல் உறைந்து போயின.

அத்தனை உறவுகளுக்கும் உற்ற துணையான நம்பிக்கைத் திருப்பதியாகவும் அமைதியின் உறைவிடமாகவும் கோபத்தின் குறியறியாத குணக் குன்றான திருப்பதியாகவும் ஏற்ற கருமங்களை இடையீடுகள் தடைகளின்றிய செயல் வடிவாக்கிய செயல் வீரரான திருப்பதியாகவும் கற்பிப்பதில் தெளிவும், நயமும், விளக்கமும், விவேகமும், வேடிக்கையும் நகைச்சுவையும் கலந்த பன்முக அறிவையும் பதிய வைக்கும் நல்லாசான் திருப்பதியாகவும் பக்திக்கும் திருமுறைக்கும் பஜனையின் மூலம் பாலமமைத்த இறைதிருநாமம் பாடிய திருப்பதியாகவும் வாழ்ந்து கல்வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசடறக்கற்று ஓர் கலாநிதி பட்டம் சூடியதும் அவரது கல்வி மற்றும் எழுத்தியல் வன்மைகளுக்கும் ஆக்கங்களுக்கும் கிடைத்த பாராட்டுக்களும் சான்றிதழ்களும் கௌரவிப்புக்களும் எண்ணில் அடங்காது பெயருக்கு ஏற்ற பெருமைகளையுடைய திருப்பதியாக வாழ்ந்து சிறந்த அவரது பிரிவை தாங்காது அவரது உறவுகளும், மாணவ மணிகளும் அன்பர்களும் நண்பர்களும் ஞானவைரவப் பெருமானது பக்த அடியார்களும் துயரத்தில் துவண்டு நிற்கும் காட்சி வேதனைக்குரியது.

தனக்கும் சமூகத்திற்கும் அதிக பயனுள்ள புண்ணிய சீலராக வாழ்ந்த திருப்பதி அவர்கள் இன்னும் குறைந்தது 25 ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டிய இவர் 65வது அகவையிலேயே இவ்வுலகை நீங்கிக்கொண்டது பேரிழப்பாகும்.

ஆசிரியர் திருப்பதி அவர்களும் நானும் ஆசிரிய நியமனத்தை ஒரே நாளில் பெற்ற உறவிலும், நட்பிலும் 34 ஆண்டுகள் நீடித்த உறவுடையவர்கள். அவர் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளை ஒரு தினம் அவரிடம் சென்று பாடசாலை ஆசிரியர் வதிவிடத்தில் அவரோடு தங்கியிருந்து அவரது ஆசிரிய மாணவ உறவின் சிறப்புக்களையும் அவரது கற்பித்தல் ஆற்றலையும் அவரது
பாடசாலைக்குச் சென்று தரிசித்தேன். அது என்றும் என் மனதில் திருப்தியான அனுபவமாகவே காணப்பட்டது.

பெற்றோர்க்கு மனம் நிறைந்த புதல்வனாகவும், சகோதரர்களுக்கு உற்ற சகோதரனாகவும், துணைவிக்கு ஏற்ற துணைவராகவும் நண்பர்களுக்கு ஏற்புடைய நண்பராகவும் வாழ்ந்து, உறவுகளுக்கு ஏற்புடைய உறவினராகவும் கடமைக்கு ஏற்ற விசுவாச சேவகனாகவும் பணி புரிந்த உத்தம சீலராகவும் வாழ்ந்து மகிழ்வித்தவர் திருப்பதி அவர்கள். இத்தகைய சிறப்புக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இவர் எல்லோர் உள்ளங்களிலும் தொடர்ந்து நீங்காது வாழ்வார் என்பது உறுதி.

திருப்பதி அவர்களது புனித ஆன்மா இறைபாதங்களை அடைந்து பேரானந்தமடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவரது குடும்ப உறவுகளுக்கும் அன்பர் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.த.தர்மராஜா
முன்னாள் தலைவர் - ஆலய தரும பரிபாலன சபை,
வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் - கோப்பாய்,
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்,
தீவக வலயக் கல்வி அலுவலகம் - வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற மணிவிழாவின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி திருப்பதி அவர்கள் பெற்றுக்கொண்ட கல்விச் சான்றிதழ்களும் ஏனைய சான்றிதழ்களும்...**

## UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA

This is to certify that

*Karthikegesu Thiruppathi*

having been admitted to the Degree of

*Master of Philosophy*

on

*11th September 2008*

was awarded this certificate

at a Convocation

holden in Jaffna on

*26, 27 and 28th of March 2010*

Witness our hands this

*Twenty sixth day of March Two Thousand and Ten*

Prof. N.Shanmugalingam
Vice Chancellor

V.Kandeepan
Registrar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
# SRI LANKA

This is to certify that

Markandu Thiruppathi

having been admitted to the Degree of

Doctor of Philosophy

on

09th October 2017

was awarded this certificate

at a Convocation

holden in Jaffna on

22nd January 2019

Witness our hands this

Twenty Second day of January, Two Thousand and Nineteen

Vice Chancellor

Registrar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

FACULTY OF GRADUATE STUDIES

මගේ අංකය / எனது இல. / My Number } YA/FGS/CAA;

ඔබේ අංකය / உமது இல. / Your Number } FGS/Ph.D./LCS/T/2013/01

තැ.පෙ. අංකය 57, තිරුනෙල්වේලි, යාපනය
த.பெ.எண் 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
P.O. Box 57, Thirunelvely, Jaffna

05/10/2018

This is to certify that the University of jaffna awarded the degree of DOCTOR OF PHILOSOPHY (Ph.D.) in TAMIL to MR.KARTHTHIGESU THIRUPPATHI.

Title of Thesis : மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் - ஓர் ஒப்பியல் ஆய்வு

A Comparative Study of Literary Technique of Maanigavasagar and Periyaazhvaar

Medium of the Research : Tamil

Mode of the Research : Part Time

The effective date of the degree is 09th October 2017.

Prof.G.Mikunthan
Dean /Faculty of Graduate Studies

Dean
Faculty of Graduate Studies
University of Jaffna
Thirunelvely
Sri Lanka

Telephone : 021 222 3608 Fax : 021 222 3608 E-Mail : fgsjaffna@yahoo.com Website : www.grad.jfn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Second International Conference on Contemporary Management
## (ICCM - 2015)

**"Driving Productivity through Knowledge & Innovation"**

*Faculty of Management Studies & Commerce*
*University of Jaffna, Sri Lanka*
*11th & 12th June, 2015*

### Certificate of Appreciation

This is to certify that

Prof./Dr./Mr./Ms. க.திருப்பதி

has presented a Research Paper titled

[illegible]

in the 2nd International Conference on Contemporary Management
held on 11th & 12th June 2015

**Prof. T. Velnampy**
**Chair**
**ICCM - 2015**

**Dr. B. Nimalathasan**
**Convener**
**ICCM - 2015**

Asian Alliance Insurance

---

**University of Jaffna, Sri Lanka**
**First International Saiva Conference**
**2016**

*"Elements of Saiva Culture & Thoughts of Social Harmony as Expounded in Sivagamas and Thirumurais"*

This is to certify that

*Mr.K. Thiruppathy*

has presented a paper titled

[illegible]

at the
**ISC – 2016**
held on 12,13,14 February 2016

organized by
Department of Hindu Civilization
Faculty of Arts
University of Jaffna

**Professor Dr. M. Vethanathan**
Conference Chair & Head
Department of Hindu Civilization
University of Jaffna

http://www.jfn.ac.lk/isc2016

---

**University of Jaffna, Sri Lanka**
**First International Saiva Conference**
**2016**

*"Elements of Saiva Culture & Thoughts of Social Harmony as Expounded in Sivagamas and Thirumurais"*

This is to certify that

*Mr.K. Thiruppathy*

has presented a paper titled

[illegible]

at the
**ISC – 2016**
held on 12,13,14 February 2016

organized by
Department of Hindu Civilization
Faculty of Arts
University of Jaffna

**Professor Dr. M. Vethanathan**
Conference Chair & Head
Department of Hindu Civilization
University of Jaffna

http://www.jfn.ac.lk/isc2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE INTERNATIONAL
ASSOCIATION OF LIONS CLUBS
DISTRICT 306 B 1

# CERTIFICATE OF APPRECIATION

*By*

## LIONS CLUB OF KOPAY

*And*

## ZONAL EDUCATION OFFICE

JAFFNA

**To**

**Mr. K. Thirupathy**

**J/Kopay Christian Colege**

For

Active Participation

In The Students Achievement In Literacy - Tamil.

25-10-2009

"MAKE CHALLENGE AN OPPORTUNITY"

**Mrs. Meera Arulneesan**
Asst / Directon of Education - Tamil

**Mrs. Aruleswary Vethanayagam**
Directon of Education

Zonal Education Office,
Jaffna.

Lion Dr. V. Thiyagarajah MJF, J.P.
Project Coordinator

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாணக் கல்வி அமைச்சு
வட மாகாணம்

நல்லாசிரியர் விருது - 2017
(குரு பிரதிபா பிரபா)

தேசத்தின் சிறார்களை எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக
முகம் கொடுக்கத் தேவையான நிபுணத்துவம் மிக்க பரிபூரண
நற்பிரஜைகளாக சமூகத்திடம் கையளிக்க ஆசிரியராக மேற்கொண்ட
பெருமதிமிக்க சேவையினை கௌரவிக்கும் வகையில்
யா/கோப்பாய் சரவணபவானந்த கல்லூரி / வித்தியாலய
திரு கார்த்திகேசு திருப்பதி
அவர்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

நல்லாசிரியர் விருது 2017



வடக்கு மாகாண
பண்பாட்டுப் பெருவிழா - 2020

சிறந்த நூற்பரிசுத் தேர்வு

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட
சிறந்த நூற் பரிசுத் தேர்வில் மாகாணத்தின் சிறந்த நூலாக தெரிவுசெய்யப்பட்ட
திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் (ஆய்வு நூல்) எனும் நூலின் ஆசிரியரான

திரு. கலாநிதி கார்த்திகேசு திருப்பதி

அவர்களைக் கௌரவித்து 22.03.2021 ஆம் நாள்
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தால் இச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2023 இல் மன்னார் சங்கவி பிலிம் நிறுவனத்தினர் திருப்பதி அவர்களின் எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் மதித்து ***"உலகத் தமிழர்"*** விருதினை வழங்கிக் கௌரவித்ததுடன் ***"தேசிய கலா விபூஷணம்"*** என்ற உயர் விருதினையும் இரு நினைவுச் சின்னங்களையும் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்ட போது...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கலா விபூஷணம் விருதுக்கான சான்றிதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழர் விருதுக்கான சான்றிதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்

அமரர் கார்த்திகேசு திருப்பதி அவர்களின் கல்விப்பணி மிகவும் மகத்தானது. தமிழ்த்துறையில் அவர் ஆற்றிய பணியினால் உயர்ந்தவர்கள் பலர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வரலாற்றில் சிறந்த மாணவனாக மிளிர்ந்து தலை சிறந்த ஆசானாக பல மாணவர்களின் உயர்ச்சிக்கு ஏணியாக விளங்கியவர் எனில் அது மிகையன்று.

எளிமையான வாழ்வியல் அவரது சிறப்பாகும். குருகுலக்கல்வி முறையில் கண்ட ஆச்சிரமம் போன்றது அவரது இல்லம். தன்னை நாடிவரும் பிள்ளைகளுக்காக அரிய பல நூல்களைக் கொண்ட ஓர் நூலகத்தை தமது இல்லத்தில் அமைத்து பல மாணவர்கள் பயன்பெற வைத்தவர்.

கிறிஸ்தவ கல்லூரியில் அவர் பணியாற்றிய காலம் தமிழ்த்துறையின் பொற்காலம் என அவருடன் பணியாற்றிய பலரும் விரும்பி நிற்பதைக் காண்கிறேன்.

தனது புலமையின் வெளிப்பாடாக பலநூல்களை ஆக்கித்தந்தவர். தனது புலமையின் எச்சமாக கலாநிதிப்பட்டத்தைத் தழுவியவர். வாழ்க்கைத்துணையை இழந்து தனித்திருந்த காலத்திலும் தனது கல்விப்பணியைத் தொய்வுகள் ஏதுமின்றித் தொடர்ந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி ஓய்வு பெற்ற பின்னர் எமது கல்லூரி மாணவரின் தமிழ்ப் புலமை மேம்பாட்டுக்காக உழைத்தவர். நம்முடம் இன்று இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.

அமரர் கார்த்திகேசு திருப்பதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நீங்கா நினைவுகளுடன் இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

அதிபர்
திரு.ச.வேலழகன்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானி திருப்பதி

இறைவனின் இறவாத இன்ப அன்பிற்காய் தன்னை வளப்படுத்திக் கொண்டவர் அமரர் திருப்பதி அவர்கள். இவர் இயல்பிலேயே அமைதியான சுபாவமும் தேவையற்ற பிரச்சனைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமலும் இறைபக்தி ஒன்றே இன்ப வாழ்வு என வாழ்ந்தவர்.

கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமியையும் சித்தாந்தபானு அவர்களையும் தனது மானசீக குருவாக நினைத்து வாழ்ந்தவர். சித்திரவேலாயுத சுவாமி ஆலய பஜனை நிகழ்வுகளில் தம்முன்னோரைப் பணிந்து குருமரமாக ஏற்று தேவார திருப்பதிகங்கள் மற்றும் பஜனைப் பாடல்கள், கந்தரனுபூதி போன்ற முருகன் பாடல்கள் எல்லாவற்றையும் விதிமுறை தவறாது ஓதும் பயிற்சிகளை பெரும்பாலும் கேள்வி ஞானத்தின் மூலம் உணர்ந்து கற்றிருக்கின்றார்.

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்திற்கு சதுர்த்தி வழிபாட்டிற்காகவும், பிள்ளையார் கதைக்காலத்திலும் வருகை தருவதுடன் திருவிழா கால பஜனையை வழிநடத்துபவராகவும் திகழ்ந்தார். பலானை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு திங்கள் தோறும் மாலையில் வருகை தந்து அங்குள்ள இளைஞர்களையும் அழைத்து பஜனை செய்வார். அத்துடன் திருவிழாக்காலங்களிலும் பஜனைக் குழுவினரை வழிப்படுத்துவார். தனது இல்லத்திற்கு அருகிலுள்ள வைரவரை ஆதரித்து வெள்ளி தோறும் பஜனை செய்வார். சித்திரசுவாமி ஆலயத்திலும் வாராந்த பஜனையுடன் விசேட தினங்களில் பஜனைக் குழுவினரை சிறப்பாக வழிநடத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரப் பாடல்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். தேவாரங்களைப் பதிகமாகவே மனனம் செய்து வைத்துள்ளார். எந்த ஒரு தேவாரத்தையும் அவர் பார்த்துப் படித்ததை நான் காணவில்லை.

அமரர் திருப்பதி அவர்கள் எந்தவொரு இடத்திலும் தனது அறிவுச் செருக்கை ளிப்படுத்துவதில்லை. அமைதியாக இருந்து அவசியம் உள்ள இடத்தில் மட்டும் தனது கருத்தைக் கூறுவார்.

தற்போது கோப்பாயில் பலரை பஜனையில் ஆர்வமுடையோராக்கி அவர் இல்லாத காலத்திலும் பஜனை சிறப்பாக நடக்கக் கூடிய வகையில் வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

எமது ஆன்மீக செயற்பாடுகள் எமது உயிரை வளப்படுத்துவனவாகும். உடம்பு பஞ்சபூதத்தினால் ஆனது. ஆனால் உயிர் ஏதாவது கர்மம் ஆற்றவேண்டின் தற்கு உடம்பு அவசியமானது. உடம்பு பல நோய்களை துன்பங்களை அனுபவிக்கும். ஆனால் உயிர் ஆன்மீக சிந்தனையில் தனது விடுதலைக்காய் பாடுபடும். எனவே இவ் உடலில் இருக்கும் போதே தனது கர்மவினைகளைத் தீர்க்கும் சிந்தனையை உயிர் கொண்டிருக்கும். அந்தவகையில் அல்லும் பகலும் ஆன்மீக சிந்தனையிலிருந்து வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய கர்மங்களை அனுபவித்து தீர்த்து இவ்வுலகில் இனி எனக்கென்ன வேலை என திருப்பதி அவர்கள் இறைபதம் நாடியுள்ளார்.

தேவாரப்பதிகங்களைப் பாடிய சம்பந்தர், சுந்தரர் அவர்களை ஒரு ஜோதி கவர்ந்து கொண்டது.

திருநாவுக்கரசு நாயனார் பாடிய மூவாயிரத்து அறுபத்தெட்டு பாடல்களையும் அணுஅணுவாக பிரித்து ஆய்வு செய்து "திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்" என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் ஆய்வுநூலை வெளியிட்டதன் மூலம் இவ்வுலகில் தான் பிறந்து வாழ்ந்ததற்கான அடையாளத்தைப் பதித்துவிட்டார். இந்நூல் காலத்தால் அழியாதது. அறிஞர்களின் அய்வுகளுக்கு உறுதுணையாக இருந்து காலங்காலமாக வாழ்ந்த திருப்பதி என்னும் நாமம் இவ்வுலகில் வாழ அன்னாரின் அத்மா இறைவனின் திருப்பாதங்களில் அகமகிழ்ந்திருக்கட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.மு.முரளிதரன்
சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
(முதுகல்விமாணி)
ஓய்வுநிலை அதிபர்.

**சிந்தனைக்கு...**

செல்வம் இல்லையா...
ஆரோக்கியம் இருக்கிறதே
என்று ஆறுதல் கொள்ளுங்கள்.
ஆரோக்கியம் இல்லையா....
அறிவு இருக்கின்றதே என்று
என்று ஆறுதல் கொள்ளுங்கள்.
பேரறிவும் இல்லையா...
யாருக்கும் தீங்கிழைக்காத
நல்ல மனிதனாக
இருக்கிறேனே என்று
நிம்மதிப் பெருமூச்சு விடுங்கள்.
ஏனெனில் நல்ல மனிதனாக
இருத்தல் என்பதே
இன்றைய பொழுதில் பெரும்
அருட்கொடைதான்...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயரா உழைப்பால் உயர்ந்த கோப்பாய்த் தமிழ் மகன்

முயற்சி திருவினையாக்கும் என்ற கூற்றை மெய்யாக்கிய அமரர் கா.திருப்பதி அவர்கள் ஆசிரியப் பணியில் உயர்ந்து விளங்கியவர். 2017 ஆம் ஆண்டு வடமாகாணக் கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் விருது (குரு பிரதிபா பிரபா விருது) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கலைமாணி (BA), முதுதத்துவமாணி (M.phil), கலாநிதி (PHD) முதலிய பட்டங்களைப் பெற்ற பேராசிரியர். திருப்பதி தேவஸ்தலம் ஆந்திரா நாட்டை உலகறியச் செய்தது போல் தனது தழிழாற்றலால் கோப்பாய் மண்ணையே உலகறியச் செய்த திருப்பதியாளர்.

வாழும் காலம் முழுவதும் மாணவர்களின் தமிழறிவை வளர்ப்பதில் அயராது பாடுபட்டதுடன் தமிழ் புலமை அருகிவரும் தற்காலத்தில் காலத்தின் தேவையுணர்ந்து தன்னை நாடி வரும் மாணவர்களுக்கு இலவசமாகத் தமிழறிவைப் புகட்டிய கொடையாளர். அதுமட்டுமல்லாது நாடகங்கள், மலர்க்குழு, பாராட்டுரைகள், வாழ்த்துப்பாக்கள் எழுதுவதில் புலமை வாய்ந்த தமிழறிஞர். தமிழ்த்தினப் போட்டிப் பரீட்சைக்கான வழிநடத்துனராகவும், பொறுப்பாளராகவும் சிறந்த சேவையாற்றினார். அவரால் வழிநடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர் பலர் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட மாபெரும் போட்டிகளில் திருப்பதி ஆசிரியரின் ஆக்கத்தினால் வடகோவை சித்திர வேலாயுத சுவாமி கோயில் அறநெறிப்பாடசாலை கதாப்பிரசங்கப் போட்டியில் மாணவர் ஒருவர் தேசிய மட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் இடத்தைப் பெற்றுக்கொடுத்து ஆசிரியருக்குப் பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

கல்விச்சேவையுடன் ஆலய, ஆன்மீக, சமூகசேவையாளராகவும் திறம்படச் சேவையாற்றியவர். தான் கற்ற பாடசாலையில் பழைய மாணவ சங்க உறுப்பினராகவும், ஆலய நிர்வாக சபைகள், பொதுப்பணி மன்றங்களில் இவரது சேவை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கோப்பாய் மண்ணில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சகல ஆலயங்களின் விழாக் காலங்களில் பஜனைக் குழுவில் இவரது கணீரென்ற குரல் இன்றும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என விபுலானந்த அடிகளார் கூறியது போல் நல்மலர்களை சீக்கிரமே இறைவன் அழைப்பது உண்மையே. அன்னாரின் இழப்பு மாணவ சமுதாயத்திற்கே மிகுந்த பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர், கல்விச் சமூகம், கோயில் அடியார்கள், பொதுப்பணி மன்றங்கள் எம்மைப் போன்ற பொது மக்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இறைவன் அழைத்த இன்மலராம் திருப்பதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.செ.செல்வரத்தினம்,
ஓய்வுநிலை செயலாளர்,
பிரதேச சபை – நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கில் திருவமைந்த திருப்பதி

திருப்பதியும் நானும் சம வயதுக்காரர்கள். ஆனால் இருவரும் ஒரே பாடசாலையில் படித்தவர்கள் அல்ல. நான் யா/மத்திய கல்லூரியிலும் அவர் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கல்வி பயின்றோம். எம்மை நண்பர்களாக இணைத்தது வடகோவை சித்திர வேலாயுத சுவாமிகள் வாசிகசாலையே ஆகும். மாணவப் பருவத்தில் இருவரும் அங்கு பத்திரிகை படிக்க வருவோம். அங்குள்ள பத்திரிகைகள் அனைத்தையும் படித்து விட்டு அதில் உள்ள விடயங்கள் பற்றிப் பேசுவோம். இவ்வாறுதான் எமது நட்பு வளர்ந்தது. பின்பு திசைக்கொன்றாகப் பிரிந்து விட்டோம். பின்பு மத்திம வயதுக் காலங்களிலேயே மீண்டும் சந்தித்துக் கொண்டோம். அவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நல்லாசிரியராக இருந்தார். நான் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணி புரிந்தேன். அவ்வப்போது சந்தித்து நாட்டு நடப்புக்கள், இலக்கியம் என்பன பற்றி கதைத்துக் கொள்வோம்.

திருப்பதி அவர்கள் தமிழ் இலக்கணத்திலும், சைவ சித்தாந்த விவகாரங்களிலும் புலமையுடையவராக இருந்தார். எனக்கு இவை இரண்டிலும் பரிட்சியம் குறைவு. திருப்பதிக்கு என்னைப் பற்றி ஓர் உயர்வான எண்ணம் இருந்தது. ஒருமுறை கதைக்கும் போது நீங்கள் விஞ்ஞானம், விலங்குகள், விவசாயம், பறவைகள், மரம் நடுகை, சூழலியல் பற்றி எல்லாம் எழுதுகிறீர்கள் எனக்கு தமிழையும் சமயத்தையும் விட்டால் எதுவும் தெரியாது என்று கூறினார். உங்களுக்கு இருக்கும் தமிழறிவும் சமய அறிவும் எனக்கில்லையே என்று நான் கூறினேன். இப்படி ஒருவருக்கொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் கூறி வியக்கும் உயர்ந்த நட்பாக எமது நட்பு இருந்தது.

அவர் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் கற்பிக்கும் போது ஒருமுறை என்னை அழைத்து மாணவர்களுக்காக பேச வைத்து மகிழ்ந்தார். பின்னர் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் என்ற அவரின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆராய்ச்சி நூல்வெளியீடு செய்யப்பட்ட போது என்னை அந்த நூல் பற்றி பேச அழைத்தார். திருநாவுக்கரசர் பற்றி எனக்கென்ன தெரியும்? என்று நான் மறுத்துவிட்டேன். உங்களால் பேசமுடியும் நீங்கள் பேசினால் அது எனக்குப் பெருமையாக இருக்கும் என்று கூறி தனது புத்தகத்தை அனுப்பி வைத்தார். நட்புக்களைப் பேணுவதில் உயர்ந்தவர் என்பதை உறுதி செய்து விட்டார்.

நல்லாசிரியனாக, சைவசமய பேச்சாளனாக அறநெறி பாடசாலைக்குரிய சைவநெறி சார்ந்த பல்வேறு விடயங்களை செய்தமை போன்றன போற்றுதற்குரியவை. அதுமட்டுமல்லாது தனியார் கல்வி நிலையத்தில் வெற்றிகரமாகத் தமிழைப் போதிக்கும் பிரபல்யமான ஆசிரியராகவும் அவர் விளங்கினார். ஓய்வு பெற்ற பின்னரும் அவர் தன் கற்கையை நிறுத்தாது திருநாவுக்கரசர் தேவாரங்களை நுணுகி ஆராய்ந்து பெற்ற கலாநிதிப் பட்டம் கற்றலுக்கு வயது ஒரு தடை அல்ல என்பதை எமக்கு எல்லாம் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்.

தாயும் மனைவியும் காலம் சென்ற பின் தனியாக அவர் வாழ்ந்த காலத்தில் இடையிடையே நான் அவரைச் சென்று சந்தித்து அளவளாவி இருக்கலாம். அதை நானோ செய்யவில்லை. அவரின் திடீர் மறைவின் பின் அது பெரும் குற்றவுணர்ச்சியாக என்னை வதைத்தது. அந்த குற்றவுணர்ச்சியால் அவரது மறைவு பற்றியும் எனது அசமந்தம் பற்றியும் முகநூலில் ஓர் கட்டுரை எழுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். அது பலரின் மனச்சாட்சியை உலுக்கியதோடு எனக்கும் ஓர் வடிகாலாக அமைந்தது. இதைப் படித்த அவரின்மாணவி ஒருத்தி கண்ணீர் மல்க அழுதபடி அவரின் பெருமைகளையும் தனது சோகங்களையும் என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

கோப்பாய் வடக்கின் எமது தலைமுறையின் முதலும் இறுதியுமான இலக்கிய கலாநிதியாக திருப்பதி எமது கிராமத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார். நல்லாசிரியராக, சமய சொற்பொழிவாளராக, பண்ணிசைப் பாவலராக, அறநெறி போதனையாளராக கோப்பாய் வடக்கின் பெருமையை துலங்கச் செய்த நண்பன் திருப்பதி அவர்களின் ஆத்மா அவர் ஆதரித்த வைரவபெருமானின் திருவடிகளில் ஒடுங்கி மோட்சமடைய அந்த வைரவசுவாமியை இறையஞ்சி நிற்கின்றேன்.

வடகோவை வரதராஜன்
ஓய்வு பெற்ற கிராமசேவகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி ஆசிரியர் பாதையில் நினைவு கூரத்தக்கவை

கோப்பாய் கிராமத்தின் சிறந்த கல்விமானாக விளங்கிய இவர் சித்திரவேலவர் தெற்கு வீதியில் பிறந்து கட்டுப்பலானையில் வீடமைத்து இனிதே வாழ்ந்து வந்தவர். வீட்டுக்கு அண்மையில் குடிகொண்ட ஞானவைரவர் கோயில் பூசகராகவும், வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனையும் தலைமை தாங்கி நடத்தி வந்த சிறப்புக்குரியவர். மேலும் ஊரின் கண்ணகை அம்மன் கோயில் திங்கள் உற்சவகால பஜனை, சக்கராழ்வார் கோயில் ஞாயிறு உற்சவகால பஜனை, சித்திர வேலவர் உற்சவகால பஜனையும் நல்லமுறையில் நடாத்தி இறையருளினைப் பெற்றவர்.

தமிழ்மொழியையும், சைவசமயத்தினையும் கற்பிப்பதிலும் அதிலுள்ள ஐயங்களை நீக்குவதிலும் இவரிற்கு நிகர் யாருமில்லை. கிராமநிறுவனங்களில் நடாத்தப்படும் பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை தலைமை தாங்கி நடாத்தி வந்தவர். மேலும் திருமணவிழா, பவளவிழா, மணிவிழா வாழ்த்துப்பாக்களை இயற்றி வடிவமைப்பதில் வல்லமை மிகுந்தவர் திருப்பதி ஆசிரியர் அவர்கள். எம்மால் நடாத்தப்பெற்ற கல்வி கழகத்திலும் சிறிதுகாலம் தமிழ் ஆசிரியராக கடமையாற்றி திருப்தி கண்டவர்.

மேலும் திருக்குறள் மன்றம், திவ்விய அறப்பணி மன்றம், சமூகசேவாசங்கம் ஆகியவற்றின் பிரதான இயக்குநர்சபை உறுப்பினராகப் பணியாற்றி சமூகத்தொண்டுகளையும் ஆற்றிய பெருமைக்குரியவர். தான்பெற்ற கல்விக்குச் சான்றாகக் கல்வி கற்ற பாடசாலைகளிலேயே ஆசிரிய சேவையினையும் ஆற்றி ஓய்வு பெற்றவர். அதேபோல் தான் கற்ற பாடசாலையின் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளிலும் முன்னின்று செயற்பட்ட பெருமைக்குரியவர். குறிப்பாக பரிசளிப்புவிழா நிதியம் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் அவர்களுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்ட போது ஊரவர்கள் இவரையும் துணைவியாரையும் அழைத்து பாராட்டுவிழா ஒன்றினை சமூகசேவா சங்க பாலர் பகல் விடுதி மண்டபத்தில் நடாத்தி மகிழ்ந்தமை நினைவு கூரத்தக்கது.

தாம் வாழ்ந்த காலத்தில் நம்பி வந்த வாழ்க்கைத் துணைவியை இழந்து அவரிற்குரிய இறுதி கடமைகளை செய்து பூவும் பொட்டுடனே அனுப்பி வைத்து அவரது பாதையில் ஓராண்டின் பின் பின்பு தானும் அப்பாதையில் 16.05.2023 அன்று இவ்வுலக வாழ்க்கையை நீத்துள்ளார். அன்னாரின் ஆத்மா, ஞானவைரவரின் பாதங்களை அடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.ஐ.சிவலோகநாதன்,
செயலாளர்,
சமூகசேவா சங்கப் பாலர் பகல் விடுதி,
முன்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை இழந்தது எங்களின் துரதிஷ்டமே.

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கையின் வடபால் அமைந்த யாழ்நகரில் நிறை செல்வமளிக்கும் கோவையம்பதியில் கட்டுப்பலானை என்னும் குறிச்சியில் கார்த்திகேசு, இரத்தினம் தம்பதியினருக்கு சிரேஷ்ட மகனாக பிறந்தார். இவருக்கு ஞானபண்டிதர், திருமகள், பார்வதி ஆகிய சகோதரர்களும் உளர்.

இவர்கள் எல்லோரும் குடும்பமாக சிறு வயதில் இருந்தே அருகில் உள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு தொண்டாற்றி வந்தனர். முக்கியமாக அமரர் அவர்கள் ஞானவைரவரில் அதிக பற்றும் தீராத பக்தியும் கொண்டவர். எந்நாளும் தவறாது வைரவனை பூஜித்து அருள் பெறும் பக்தராவார்.

சிறு வயதிலே தந்தையை இழந்த இவர் தாயின் அரவணைப்பிலே வளர்த்து வந்தார். கணவரின் துணை இல்லாது தன் நான்கு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்கு அரும்பாடு பட்டார். ஆனால் தன்முயற்சியை கை விடாது வைரவரின் துணையோடு தன்மக்களை, நன்மக்கள் ஆக்கினார் என்பது அவரது கடின உழைப்பின் பலனே.

குடும்ப கஷ்டம் காரணமாக தன் தாயாருடன் அமரரும் கூலி வேலைக்கு சென்று தனது கல்விச்செலவுகளை தானே கவனித்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அமரர் தனது ஆரமபக்கல்வியை யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலத்திலும், தொடர்ந்து தனது உயர்கல்வி வரை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கற்று முடித்து தன்னுடைய பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்தில் முடித்து கலைமானி பட்டத்தை தனக்கு சொந்தமாக்கிக்கொண்டார். தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வித்தகர், செஞ்சொற்செல்வர், கலாநிதி, உலகத்தமிழர், கலாவிபூஷணம், முதுகலைமானி ஆகிய பட்டங்களுக்கும் உரிமையாளரானார். அன்னார் அவர்கள் 1989ம் ஆண்டு மண்டைதீவை சேர்ந்த கந்தலிங்கம் சாந்தி என்பவரை இல்லாளாக ஏற்றுக்கொண்டு நல்லறம் நடாத்தி வந்தார். இவர் தன்னுடைய பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு 1989ம் ஆண்டு பளை மத்திய கல்லூரியில் தன்னுடைய ஆசிரிய வாழ்க்கையை தொடங்கி இறுதியாக தான் கற்ற பாடசாலையான யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலத்தில் கற்பித்து தனது 29 வருட ஆசிரிய வாழ்க்கையை 2018இல் முடித்து கொண்டார்.

பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பும் கிட்டதட்ட 6 வருடங்களாக தனது வீட்டில் இலவசமாக மாணவர்களுக்கு கற்பித்து வந்தார். இவர் தனது வாழ்நாள் காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களின் தமிழ் அறிவு விருத்திக்கு உந்துசக்தியாக இருந்திருக்கின்றார். அதனை விட பல மாணவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் இருந்து அளப்பரிய சேவைகள் பல ஆற்றினார் என்பதும் யாவரும் அறிந்ததே.

இவர் சிறந்த கோயில் பற்றாளர். அதற்கு சான்றாக ஊர்க்கோயில்களில் இடம்பெறும் திருவிழாக்கள் யாவற்றிலும் தவறாது கலந்து கொள்வதோடு அத்திருவிழாக்களில் நடைபெறும் பஜனைப் பாட்டுக்களை செவ்வனவே ஒழுங்கமைத்து தனது தொனித்த குரலில் பஜனைப் பாட்டுக்கள் முழுவதையும் சிறப்பாக நடாத்தி முடிப்பார். அதனை விட ஊர்சூழ் மரணச்சடங்குகளில் பஞ்சபுராணம் உட்பட திருப்பொற்சுண்ணங்களையும் எண்ணற்ற சடங்குகளில் பாடி இருப்பார். அதனைவிட எமது ஞானவைரவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு தலைமை தாங்கி வந்தார். அமரரின் தலைமையின் கீழ் ஆறு வருடங்களுக்கு மேலாக எமது நிர்வாகம் சிறப்பாக இயங்கி வருகின்றது. தலைமை பொறுப்பை ஏற்க முதலும் கூடவே, ஞான வைரவருக்கு நடைபெறும் நித்திய பூஜைகளை ஒழுங்கமைத்து செவ்வனவே நடைபெறுவதற்கு காரணமாக இருந்தவர் அமரர். தான் வரமுடியாத சந்தர்ப்பங்களிலும் (தொடக்கு காரணமாக) தன்னால் இயலாத சந்தர்ப்பங்களிலும் எவ்வாறாயினும் ஒருவரை ஒழுங்கமைத்து நித்திய பூஜைகளையும், பஜனைப் பூஜைகளையும் தவறாது நடாத்துவதற்கு உந்து சக்தியாக இருப்பார். இவற்றிற்கும் மேலாக அன்னார் அவர்கள் சிறந்த எழுத்தாளர், கவிஞர் பல புத்தகங்களை எழுதியிருக்கின்றார். அமரத்துவம் அடையும் சில நாட்களுக்கு முன்னும் புத்தகம் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார்.

அண்மையில் திருவாசகத்தின் மகிமைகள் என்னும் தலைப்பின் கீழ் எழுதிய புத்தகம் ஒன்றை ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோவிலில் வெளியிட்டிருந்தார். மற்றைய இன்னொரு நூல் ஒன்று எழுதி முடித்தது வெளியிடுவதற்கு தயாரான நிலையில் அன்னார் தவறி விட்டார். அந்நூலும் வெகுவிரைவில் வெளியிடப்படும். இவர் தன்னுடைய நோய் வாய்ப்பட்ட இல்லாளையும் பல வருடங்களாக இவரே பராமரித்து வந்த போதிலும் அவர் 23.01.2022 அன்று தீரா நோய் காரணமாக சிவபதமெய்தி விட்டார்.

அதன் பின்னர் மனைவியின் பிரிவின் பிறகு 1½ வருடங்கள் தன்னந்தனியே வாழ்ந்து வந்தார். அவருடைய தமக்கை, மருமகன் மற்றும் அயலவர்களின் அரவணைப்பு உதவிகள் கிடைத்தும் அவர்கள் அன்னாரின் தனிமையை உணரவிடாது பராமரித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாளின் பிரிவு அவரை வாட்டி வதைத்தது. அதனை விட அவருடைய இன்னொரு தமக்கை ஒருவரையும் தான் இறக்கும் வரையிலும் அன்னாரே பராமரித்து வந்தார்.

சமயத்தொண்டுகள் மட்டுமல்லாது சமூகத்தொண்டோடும் ஒன்றி ஊரின் வளர்ச்சியிலும் அயலவர் நலனிலும் அக்கறை கொண்டவராகவும் திகழ்ந்தார்.இவ்வாறு பன்முகங்களை கொண்ட சமூகப்பற்றாளனை காலனவன் 16.05.2023 அன்று அகால மரணத்தால் கவர்ந்து கொண்டான்.

கலைமாணி முதல் கலாநிதிப்பட்டம் வரை பெற்ற ஒரு சிறந்த ஆசானை, முத்தமிழ் வித்தகரை, செஞ்சொற்செல்வரை, சமூகப்பற்றாளனை, சமயத்தொண்டனை, எம்ஆலயத்தின் தலைவனை இன்னும் எத்தனை எத்தனையோ மன்றங்களின் உறுப்பினரை இழந்து தவியாய் தவிக்கின்றோம்.

மாணவர்கள் உட்பட பலருக்கும் பலவகையில் பயன்பட்டு தனது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கி மண்ணுலக வாழ்க்கையை நீத்தமையால் இவரது குடும்பத்தினரும்
உறவினர்களும் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளனர். நாமும் அவர்களின் துயரில் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வடகோவையூர் ஞானவைரவப்பெருமானின் பாதார விந்தங்களை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

-ஆலய பரிபாலன சபை-
வடகோவை ஞான வைரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நயப்புரை

***சிரிப்புக்கதைகள் மூலம் சிந்தனையை மேம்படுத்தி மகிழ்வுடன் தமிழ் கற்பதற்கு மாணவர்களை வழிப்படுத்திய தமிழ்மொழி பாட ஆசிரியர் அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி***

"சிரிப்பு" இது சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான கையிருப்பு

வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" இது தமிழ்ப் பொன்மொழி. அமிழ்தினும் இனிய எங்கள் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணங்களை மாணவர்களுக்கு சுவைபடக் கற்பிப்பதற்காக சிரிப்புக்கதைகளை பிரதான சாதனமாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் ஆசிரியர் அமரர் கலாநிதி கா.திருப்பதி அவர்கள்.

சிலேடைமொழி கலந்த சிரிப்புக்கதைகள் கூறி எல்லோரையும் சிரிக்க வைத்த ஆசிரியர் அவர்கள் 16.05.2023 செவ்வாய்க்கிழமை எல்லோரையும் அழவைத்து விட்டு தனது தெய்வமான வைரவப்பெருமானின் திருப்பாதங்களில் சரணடைந்து விட்டார்.

என்றும் மகிழ்ச்சியான மலர்ந்தமுகம், பரந்த அறிவுக்கேற்ற விரிந்த நெற்றி, விரிந்த நெற்றி முழுவதும் வீபூதிப்பூச்சு. எவரது மனங்களையும் புண்படுத்தாத பண்பான பேச்சு. இவைதான் ஆசிரியர் கலாநிதி திருப்பதி அவர்களின் தனித்துவமான அடையாளங்கள்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த அமர்களான கார்த்திகேசு இரத்தினம் தம்பதிகளின் மகன் ஆகிய கலாநிதி திருப்பதி அவர்கள் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் தமிழ்மொழி ஆசிரியராகப் பணிபுரிந்து தமிழ்மொழியில் ஆற்றல் மிக்க பல மாணவர் பரம்பரையை உருவாக்கியிருக்கிறார்.

அத்துடன் இவரின் தமிழ்மொழி கற்பிக்கும் ஆற்றலை கௌரவிக்கும் வகையில் 2017 இல் வடமாகாகணக்கல்வி அமைச்சு "நல்லாசிரியர் விருது" வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் ம.இரகுநாதன் அவர்களின் வழிப்படுத்தலில் இவர் மேற்கொண்ட "பெரியாழ்வாரும் மாணிக்கவாசகரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றி ஒப்பியலாய்வு" என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரைக்காக 2019 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டத்தை வழங்கியுள்ளது. அத்துடன் இன்றைய மாணவர்களின் பயன்பாட்டிற்காக "திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்" என்ற ஆய்வுநூலை 2020 இல் எழுதி வெளியிட்டுள்ளார்.

இயல்பாகவே இயற்றமிழில் ஆற்றல் மிக்க கலாநிதி திருப்பதி அவர்கள் பிரதேசத்தில் உள்ள பல சைவ ஆலயங்கள் மீது திருவூஞ்சல் பாடல், திருப்பள்ளியெழுச்சி ஆகிய பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அன்னாரின் திடீர் மறைவு தமிழ்மொழியை நேசிக்கும் உள்ளங்கள் ஒவ்வொருவருக்கும் பேரிழப்பு ஆகும். தமிழ்மொழியின் மேன்மையை உலகெங்கும் பரப்புவதே அமரர் கலாநிதி திருப்பதிக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலி ஆகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வடகோவை சிவநேசராசன்

ஓய்வுநிலை ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பதி என்ற தமிழ்ப்பேராறு!

**கலைவாணியின் நினைந்துருகல்.....**

காலம் என்ற ஒன்று கடந்து ஓடுவது... ஓடிக்கொண்டு இருக்கும். பின்னோக்கிப் பார்க்காது. மக்கள் நலனும் அதற்கில்லை. மனிதநேயமும் அதற்கு இல்லை. இருந்திருப்பின் எங்கள் தமிழின் திருப்பணியான் திருப்பதி ஆசிரியரை விட்டு வைத்திருப்பான். தமிழின் விதைகளை இன்னும் விதைத்திருக்க வழி வகுத்திருப்பான்.

ஈழத்தமிழ் அன்னையின் இருமணிகளாம் பண்டிதமணியும், புலவர் மணியும் வகுத்த பாதையில் இன்னும் சில நூற்றாண்டுக்கு தமிழை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லவல்ல ஒரு அரிய மகனை நாம் இழந்து நிற்கின்றோம். கலாநிதிப்பட்டம் அவர் கனவு. அது கைக்கு எட்டிய கணம் அவர் பிரிந்தது என்பது காலத்தின் சூழ்ச்சியே அன்றி வேறு இல்லை என்பேன்.

யாழ் நகர் விக்னாவில் இவர் பெயர் ஒளிரும். வன்னி உடையார்கட்டு இவர் வாய்மொழி தமிழுக்கு வாயூறும். கிறிஸ்தவ கல்லூரியும் சரவணபவானந்த வித்தியாலயமும் இவர் தமிழ் வித்தகத்தை என்றும் போற்றும். நாவலர் வழியில் தமிழ் இலவசக்கல்வி இவர் வீட்டில்..அண்மையில் கூட யாப்பமைதிகள் பற்றி ஒரு புத்தகம் கைகளில் தவழ்ந்தது இவரின் தனித்துவம். கிருஸ்ணர் கோயில் பஜனைக்குழு பக்திக்கு எடுத்துக்காட்டு. திருப்பதி என்னும் திருநாமமே தமிழின் பேராறு.

இத்தனை பெற்றும் தீநாக்குகள் இவரைத் தீண்டியமை ஏனோ? கண்ணகி அழைத்த போது மதுரையை எரிக்க மறுத்த அக்கினிதேவன், எங்கள் அற்புத மலரை கருக்கியது ஏனோ? கண்மூடித் திறப்பதற்குள், உயிர்ச்சுருதி இறங்கியது வேதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றே, வானத்தின் வழியே நீ தவழ்ந்து செல்கையில் தமிழ் மணம் வீசும் மலையில் தரிப்பாய். அதுவே திருப்பதி தரிசனம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


இயக்குநர்,
திரு.சி.சிவரூபன்
கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் நூல் வெளியீட்டு விழா நிகழ்வின் போது....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவனாக இருந்த போது.....





பிரதம ஆதீனக் குருக்களிடம் பதக்கம் வாங்கிய போது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கள் மாணவியின் உள்ளத்திலிருந்து...

யாழ் மண் பெற்றெடுத்த பெருந்தகையே! என் பெருமைக்குரிய ஆசானே! இவ்வுலகில் நீங்கள் ஆற்றிய மனிதனை நாம் என்றுமே மறவோம். திருப்பதியில் வீற்றிருக்கும் இறைவன் அடியவரின் துன்பங்களைக் களைவது போல் எங்கள் திருப்பதி ஆசானோ மாணவரின் அறியாமை இருளைப் போக்கியவர்.

என் ஆசானின் ஆசிரியப் பணியின் முதல் பாடசாலை முழங்காவில் மகா வித்தியாலயம். அதில் நான் அவரின் முதல் மாணவி. தமிழ் அவரின் மூச்சு. அதனால் தமிழ்தனை எமக்கு அள்ளித்தந்தார். இலக்கியத்தோடு இலக்கணத்தை இசையாக்கி இதமாகக் கற்பித்தமை இன்னும் என் மனதில் கண்மேல் எழுத்துப்போல் நினைத்துள்ளது. பட்டங்கள் பல பெற்றும் பகட்டின்றி பண்போடு வாழ்ந்திருந்தார்.

கல்வி என்னும் சுடர் மூலம் எத்தனையோ கல்விமான்களை உருவாக்கியவர். ஆலமரமாய் நின்று பல ஆசிரிய விருதுகளை உருவாக்கிய உத்தமர். கிளிநொச்சி மண்ணில் முழங்காவில், அக்ராயன், பளை என இவரது பணி நீண்டகாலம் நிலைத்திருந்தது.

அன்பான ஆசானே! உங்கள் மாணவி எனக்கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். நகைச்சுவை கலந்த பேச்சினால் கவலைகளை மறந்தேன். சிரித்த முகத்துடனே நீங்கள் வலம் வந்த நாட்களை நினைக்கையில் என்நெஞ்சம் கனக்கிறது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் மாணவி,

திருமதி கமலாதேவி சந்திரகுமார்

யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் ஒரு சமூக சேவையாளன்

புகழ் பூத்த கல்விமான்கள் பலரை உருவாக்கிய பெருமை எமது கோப்பாய் மண்ணுக்குண்டு. கல்வியில் சிறந்து விளங்கிய கோப்பாய் மண்ணில் தன் அயரா முயற்சியால் தமிழில் ஒரு கலாநிதியாக எம் மண்ணிற்கு பெருமை சேர்த்த பெருந்தகைதான கலாநிதி கார்த்திகேசு திருப்பதி அவர்கள்.

திருப்பதி என்ற பெயருடன் இணைத்து எல்லோரும் இவரை திருப்பதி ஆசிரியர் என்று தான் அழைப்பார்கள். அந்தளவுக்கு ஆசிரியப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு சேவையாளர் என்று கூறவேண்டும். கற்றவர்கள் எல்லோரும் கற்பிப்பதில் வெற்றி கண்டுவிட முடியாது. ஆனால் கற்றதோடு மட்டுமன்றி கற்பிப்பதிலும் சிறந்தவர். அதுமட்டுன்றி மாணவர்களை ஊக்குவிப்பதிலும் அவர்களது குறைகளை நிவர்த்தி செய்து கற்றலில் ஈடுபடுத்துவதிலும் கூட அவர் முன்னுதாரணமாக திகழ்ந்தார். பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தனது அன்புப் பரிசுகளை தன்னால் இயன்றவரை நல்கி மேலும் கற்றலுக்கு ஊக்குவித்து பொருளாதார உதவி செய்த பெருந்தகை. சமயமறிந்து உதவுவதில் வல்லவர். கல்வியோடு மட்டுமன்றி தமிழ் வளர்ப்பதிலும் அவர் பங்காற்றியுள்ளார். மாணவர்களை தமிழ்ப் போட்டிகளுக்கு தயார் செய்வதிலிருந்து கட்டுரைகள், கவிதைகள் என அவர் எழுதிய எழுத்துக்கள் அழியாதவை. அவரது நூல்களும் இதற்குச் சான்றாகும்.

கல்விப்பணியோடும், தமிழ்ப் பணியோடும் நின்றுவிடாது மக்களிடையே இறைபக்தி வளர்க்க வேண்டுமென தனக்கு அண்மையிலுள்ள ஞானவைரவர் ஆலயத்தில் வெள்ளிதோறும் கூட்டுப்பிரார்த்தனையை கரிசனையுடன் நடாத்தி அதில் பலரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குகொள்ளச் செய்தவர். ஆலயங்கள் பலவற்றில் பஜனைப் பாடல்களின் போது இவரது குரலே கம்பீரமாக ஒலிக்கும். பஜனைப் பாடல்களும் பஞ்சபுராணப் பாடல்களும் நிறையவே தெரிந்து கொண்டவர் திருப்பதி அவர்கள்.

இவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் கோப்பாயில் இயங்கும் பல சங்கங்களுக்கு தனது ஆதரவினையும் ஆலோசனைகளையும் வழங்கி சங்க வளர்ச்சிக்கு உதவியவர். கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்திற்கும் இவர் பல உதவிகளைத் தேவையறிந்து செய்துள்ளார்.

கல்விமானாக மட்டுமன்றி தனது சமூகத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் சமூக வளர்ச்சிக்கு தன்னாலியன்றவரை சேவையாற்றிய ஒரு சமூக சேவையாளனின் இழப்பு கோப்பாய் மண்ணிற்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா ஞானவைரவர் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..!!!

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ப முடியவில்லை / தாங்க முடியவில்லை

எங்கள் யாவரின் அன்புக்கும் பண்புக்கும் பக்திக்கும் உரிய கலாநிதி திருப்பதி ஆசிரியர் அவர்கள் மரணித்துவிட்டார் என்ற செய்தி நம்பவும், தாங்கவும் முடியாத ஒரு வரலாற்றுத் துயரமாக எம்மை மாற்றியுள்ளது. தமிழ், சமயம் என்பவற்றில் உள்ள பாண்டித்தியம் எல்லோரையும் மதிக்கும் பண்பு எத்தகைய துன்பம் துயரம் ஏற்படினும் அதனைத் தாங்கும் மனோதிடமும் தனி நபரையோ, சபையையோ கலகலப்பாக வைத்திருக்கும் சாமர்த்தியம் சமூக, சமய, கலாசார விழுமியங்களை பற்றுறுதியுடன் கைக்கொள்ளும் திறண் எம் இனம் சார்ந்த பொதுநலக்கொள்கைப் பற்றும், அரசியல் ரீதியான ஒற்றுமையினை வலியுறுத்தும் இலக்கு என்பவற்றை வரித்துக் கொண்டு சமூக எழுச்சிக்காக வாழ்ந்த ஒரு மாமேதை என்று கூறின் மிகப் பொருத்தமானதாகும்.

எமது கிராமத்தின் வெள்ளெருவை விநாயகர் ஆலயம், ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோயில், கண்ணகை அம்மன் ஆலயம், சக்கராழ்வார் ஆலயம், ஞானவைரவர் கோயில் ஆகிய ஆலயங்கள் தோறும் சென்று வழிபாட்டினை மேற்கொள்வதிலும் அவ்வாலயங்களில் பஜனைக் குழுவுக்கு தலைமையாக இருந்து மெய்யன்பர்களுக்கு வழிகாட்டிய பெருமகன். அத்துடன் நல்லைக்கந்தன் தேர் உற்சவம், சந்நிதியான் தீர்த்தோற்சவம் என்பவற்றிற்கு 2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற பஜனை மூலம் அடியார்களை ஆலயத்திற்கு அழைத்துச் சென்றமையும், திருவெம்பாவைக் காலத்தில் அடியார்களை அதிகாலை துயில் எழுப்ப கிராமம் பூராகவும் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு சங்கு, சேமக்கலத்துடன் திருவெம்பாவைப் பாடல்களை ஓதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவரும் காட்சிகளை நினைவு கூருகின்றோம். அத்துடன் தனது இல்லத்திற்கு அருகே அமைந்துள்ள ஞான வைரவர் ஆலயத்தின் நித்திய தொண்டனாகவும், விசேட தினங்களுக்கான பூசை ஏற்பாட்டாளராகவும் செவ்வாய், வெள்ளி தினங்கள் பஜனையாளராகவும் தன் இறுதி மூச்சுவரை இருந்துள்ளார்.

தனது வறுமை நிலையிலும் விடா முயற்சியால் கல்வியில் படிப்படியாக மேன்மை நிலையை எய்தி 'கலாநிதி' என்ற உயரிய பட்டத்தைப் பெற்று எமது கோப்பாய் கிராமத்திற்கு பெருமை சேர்த்த பெருந்தகையாவார்.

கலாநிதி கார்த்திகேசு திருப்பதி அவர்கள் இன்றும் எம்முடன் உள்ளார். எமது மனக்கண்ணில் அவரின் ஒளிக்கீற்று தெரிந்த வண்ணம் உள்ளது. எமது ஆலயங்களில் அவரின் இனிமையான உரத்த குரலில் ஒலித்த பஜனைப் பாடல்கள் என்றும் பசுமையாக எமது காதுகளில் ரீங்காரம் இட்ட வண்ணம் இன்றும் உள்ளன. எம்மை விட்டு இவர் மறையவில்லை. எம்முடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

இளம் வயது வரை கல்வியைத் தொடர்வதற்கு கஸ்ட நிலை உருவாகியிருந்தாலும் அன்புத்தாயாரின் ஒத்தாசையும் ஊக்குவிப்பும் அவரை ஒரு சிறந்த ஆசானாக மிளிரச்செய்துள்ளது. திருமண வயதை அடைந்ததும் அவரின் அன்பான மனைவியின் ஊக்குவிப்பாலும் திருப்பதி ஆசிரியர் அவர்களின் கடும் முயற்சியினாலும் தன்னை உயர்ந்த இடத்துக்கு வளர்த்துக் கொண்டார்.

இவர் என்றும் எளிமையாகவும் அடக்கமாகவும் வாழ்ந்த திருப்பதி ஆசிரியர் அவர்கள் இவ்வுலகில் செய்த புண்ணிய காரியங்களுக்காக "தில்லைக் கூத்தன்" தன் திருவடியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்வான் என்பது திடமான உறுதி. எமது உள்ளங்களில் என்றும் நிறைந்திருக்கும் அன்னாரின் ஈடேற்றத்திற்கு நாமும் இறையருளை வேண்டி இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.சி.சத்தியலிங்கம் (சக்தி)
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பத்திற்கும் பாசத்திற்கும் உரிய மாணவன் திருப்பதி

அமரர் கார்த்திகேசு திருப்பதி எனது மாணவனும் உறவினரும் ஆவார். நான் 1972 ஆம் ஆண்டு யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் ஆசிரியர் நியமனம் பெற்ற போது அவர் க.பொ.த (சா/த) படித்துக்கொண்டிருந்தார். அவருடைய வகுப்பிற்கு நான் கணித பாடம் கற்பித்தேன். ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் அவர் தமிழுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை கண்டு பாராட்டியும் இருக்கிறேன்.

கோப்பாய் வடக்கு ஞானவைரவர் கோயிலின் தலைவராக இருந்துள்ளார். அக்கோயிலில் இவரே பூசை செய்வார். அடியார்களை வழிப்படுத்தி விசேட நாட்களில் பூசை சிறப்பாக அன்னதானத்துடன் நடைபெறும். கோப்பாய் கிராமத்தில் உள்ள கோயில்களில் பஜனைக்குழுவில் இருந்து பஜனை செய்ய சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் வழிகாட்டுவார். கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் சித்திரா பௌர்ணமியன்று சித்திர புத்திரனார் சரிதம் படிப்பார்.

நாம் இருவரும் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளை மார்கழி திருவெம்பாவை நாட்களில் அதிகாலை 3.30 மணிக்கு ஞான வைரவர் கோயிலில் இருந்து அடியார்களை அதிகாலை துயில் எழுப்ப கிராமம் பூராகவும் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு சங்கு, சேமக்கலத்துடன் திருவெம்பாவைப் பாடல்களை ஓதி உலாவரும் காட்சிகளை நினைவு கூருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருப்பதி அவர்கள் தாயின் அர்ப்பணிப்பாலும், மனைவியின் ஊக்குவிப்பாலும் தன்னுடைய முயற்சியாலும் பல பட்டங்களைப் பெற்று இந்தக் கோப்பாய் மண்ணுக்கு பெருமை தேடித்தந்துள்ளார். பாடசாலைக் கற்பித்தல் மட்டுமல்லாது தனது வீட்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தமிழ் பாடத்தை விளக்கத்துடனும் உதாரணங்களுக்கூடாகவும் மிகவும் சிறப்புறக் கற்பிப்பார். தனது வீட்டுக்கு கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடாத்தி உயர் சித்திகளைப் பெற வழிவகுத்தவர்.

திருமண வாழ்த்துப்பா, பிரியாவிடை வாழ்த்துப்பா சிறப்பாக எழுதிக் கொடுக்கும் வல்லமை கொண்டவர். இப்படியாக தமிழில் கலாநிதிப் பட்டம் பெற்று அமரத்துவமடைந்த திருப்பதி ஆசிரியரின் இழப்பு எமது ஊருக்கு பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.வே.சண்முகலிங்கம்
ஓய்வுநிலை விசேட கணித ஆசிரியர்,
முன்னாள் பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர்.
சாமஸ்ரீதேசகீர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பகிர்வுகளுடன் நானும் ஓர் மாணவனாய்.....

கோவையம்பதியிலே பல கல்விப்பணிகளிலும், அறப்பணிகளிலும் பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு வந்த அமரர் கார்த்திகேசு திருப்பதி ஆசிரியர் அவர்களின் திடீர் மறைவுச்செய்தி எம்மையெல்லாம் கண்கலங்க வைத்தது. அமரர் கார்த்திகேசு திருப்பதி ஆசிரியர் அவர்களின் மாணவன் என்ற வகையிலே அவரது தமிழ்ப்பாட கல்விப்பணியானது அவருக்கு உரியது ஒன்று. தமிழ்த்துறையிலே நீண்டதூரம் பயணித்த ஆசிரியர் திருப்பதி அவர்கள் நீண்ட பாண்டித்தியம் கொண்ட புலமையாளர். அவர் எம்மாணவர்களுக்கெல்லாம் தமிழ் போதிக்கும் போது பாடத்துறை மட்டுமல்லாது வாழ்வியல் தத்துவங்களையும் நடைமுறை வாழ்க்கை முறைகளையும் முன்வைத்து கல்வி போதித்த பேராசான்.

கல்விப்பணி மட்டுமல்லாது பழைய மாணவராக யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தில் எம்மோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் வழங்கியதுடன் பாடசாலையின் உயர்ச்சிக்கு நிதிதிரட்டுவதற்காக அல்லும் பகலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொடையாளர்களிடம் அன்பாகப் பேசி பாடசாலையின் தேவைப்பாடுகளை முன்வைத்து அயராது உழைத்தவர்.

மேலும் கோவையம்பதியிலே உள்ள பல்வேறு ஆலயங்களிலும் வழிபாடுகளிலும், பஜனைகளிலும் ஈடுபட்டு இறைவழிபாட்டை வளர்ப்பதிலும், வழிபாட்டிலும் பக்திபூர்வமாக ஈடுபட்டு வந்தவர். இவ்வாறு தனது ஓய்வுக் காலத்திலும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளை மாணவர்களுக்கும், ஊரவர்களுக்குமாக ஆற்றிக் கொண்டிருக்கும் வேளையிலே திருப்பதி ஆசிரியர் அவர்களின் திடீர் மறைவை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.செ.கார்த்தீபன்

கிராம அலுவலர் - புத்தூர் கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பினால் அனைவரையும் ஆட்கொண்ட தமிழ் ஆசான்

கலையழகும் கல்வி வளமும் கொழிக்கும் ஈழ மணித் திருநாட்டின் மணிமுடியாகத் திகழும் யாழ்ப்பாண நன்னகரில் வேலனவன் அருகில் இருக்க கார்த்திகேசு இரத்தினம் தம்பதிகள் அவர்களுக்கு செல்லப்பிள்ளையாக அவதரித்தவர் நம் திருப்பதி ஆசிரியர் அவர்கள். 'திருப்பதி' என்னும் திருநாமம் உலகில் உள்ள அனைவராலும் விரும்பப்படும் இறைவனின் திருநாமம் என்றே கூறலாம். தனது பெயருக்கு ஏற்றாற் போல் எல்லோரிடமும் மிகவும் அன்பாகவும் நட்பாகவும் பழகி வந்த இவர் யாரைக் கண்டாலும் ஒரு நிமிடமாவது கதைத்து சுகநலம் விசாரிக்காமல் போகமாட்டார். இவ்வாறு உறவுகளைத் தக்க வைத்துக்கொள்வதில் உள்ளம் மகிழ்ந்தவர்.

தன்னிடம் கல்வி கற்ற மாணவச் செல்வங்களை தன் பிள்ளைகள் போல் பாசம் காட்டும் அன்பாளன் திருப்பதி ஆசான் அவர்கள். எல்லா மாணவர்களைப் போலவும் நானும் அவரிடம் தமிழ் கற்றேன் என்பதில் பெருமைகொள்கிறேன். நான் யா/கோப்பாய் கிறஸ்தவ கல்லூரியில் கல்வி கற்கும் போது க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) அவரிடமே தமிழ் பாடத்தை பயின்றேன். தமிழ் பாடத்தில் இலக்கணம் என்ற ஒரு பகுதி கடினமாகவே இருக்கும். பரீட்சைக் கேள்விகளில் பல்தேர்வு வினாக்கள் வரும் போது இலக்கணப்பகுதிக்கே புள்ளிகள் குறைவாக வரும். குறைந்த புள்ளிகளைப் பார்வையிட்டு ஒவ்வொரு வினாக்களையும் தெளிவாகவும் விளக்கமாகவும் கற்பித்தார். பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாது அவருடைய வீட்டிலும் என்னுடன் சேர்ந்து எனது தம்பிமாரும் பாடசாலையில் இடம்பெறும் போட்டிகளான கட்டுரை, கவிதை, இலக்கணம், பேச்சு, இலக்கியம் போன்ற போட்டிகளுக்கு அவரிடம் இருந்தே பல்வேறு விடயங்களைப் பெற்றுக்கொள்வோம்.

கல்விப்பணியோடும், தமிழ்ப் பணியோடும் நின்றுவிடாது மக்களிடையே இறைபக்தியைக் வளர்க்க வேண்டுமென தனது கிராமத்தில் அமைந்துள்ள வெள்ளெருவை விநாயகர் ஆலயம், ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோயில், கண்ணகை அம்மன் ஆலயம், ஞானவைரவர் கோயில் ஆகிய ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை தானே ஆக்கியும் வடிவமைத்தும் உள்ளார்.

தனது வீட்டுக்கு அண்மையிலுள்ள ஞானவைரவர் ஆலயத்தில் வெள்ளிதோறும் கூட்டுப்பிரார்த்தனையை பக்தியோடு முன்னின்று நடாத்தி அதில் பலரையும் பங்குகொள்ளச் செய்தவர். எல்லோரும் பஜனைப் பாடல்கள் பாட வேண்டுமென்ற ஆர்வத்தில் பஜனைப் பாடல்கள் அனைத்தையும் ஒரு புத்தக வடிவில் அழகுபடுத்தி பஜனை பாடவருவோருக்கு பகிர்ந்தளித்தார். அதுமட்டுமல்லாது அண்மையில் கோப்பாய் சக்கராழ்வார் ஆலயத்திலும் பஜனைப்பாடல்கள் பாடுவதற்கு பாடல்கள் யாவற்றையும் தொகுத்து ஆலயத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

“மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் - ஓர் ஒப்பியல் ஆய்வு, “திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் பற்றிய ஆய்வு” இந்த இரண்டு ஆய்வு நூல்களையும் அவரிடம் கல்வி கற்ற மாணவியாய் கணினியில் வடிவமைத்தும் கொடுத்தேன். பூவோடு சேர்ந்து நாரும் மணப்பது போல அவருடைய ஒவ்வொரு ஆய்வு நுணுக்கத்தையும் நானும் கற்றுத்தெளிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள் பற்றிய ஆய்வு நூலை வெளியீடு செய்த பின்னர், மற்றைய இன்னொரு நூல் ஒன்றை வெளியிடுவதற்கு பொருத்தமான புத்தகத்தினையும், மடிக்கணினியையும் என்னிடமே ஒப்படைத்துவிட்டு அன்னார் தவறி விட்டார். இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இவருடைய திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டதும் இதயம் ஒருகணம் நொருங்கிப்போயின. எல்லாம் உமக்குத் தெரிந்துதான் என்னிடம் ஒப்படைத்தீரா ஆசானே? எல்லோருடைய முயற்சியாலும் அந்நூலை வெகுவிரைவில் வெளியிடச் செய்வோம்.

திருஞானசம்பந்தரைப் போல ஆயிரம் யோகிகள் ஜோதியில் ஒன்றாக கலந்து விட்ட வரலாற்று நிகழ்வுகளைப் பல்வேறு நூலின் வாயிலாக அறிந்துள்ளோம். அது போல திருப்பதி ஆசானும் ஜோதியிலே ஐக்கியமாகிவிட்டார் என்றே கூறலாம்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதம் சேரப் போற்றித் துதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் தங்களின் அன்பு மாணவி,
திருமதி.வினுஷா இராகவன்
உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.10.2021 வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட போது..

# திருமுறைகளின் இலக்கிய நயத்தை ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்ற

## கார்த்திகேசு திருப்பதி



(யாழ்ப்பாணம்)

திருமுறைகளில் பொதிந்துள்ள தமிழ் இலக்கியச் சிறப்பை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் "பெரியாழ்வாரும், மாணிக்க வாசகரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றிய ஒப்பியல் ஆய்வு"என்னும் தலைப்பில் ஆய்வு செய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் ம.இரகுநாதனின் மேற்பார்வையில் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி திருப்பதி ஓய்வுநிலை தமிழ் ஆசிரியர் ஆவார். இயல்பாகவே தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பிப்பதில் ஆற்றல் மிக்கவர்.

கிளிநொச்சி முதல் முழங்காவில் மகாவித்தியாலயம், பளை மத்தியகல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தமிழ் பாடத்தை கற்பித்து பல மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

அத்துடன் 2017 இல் வட மாகாணக் கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

"திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் உள்ள இலக்கிய உத்திகள்" தலைப்பில் மேற்கொண்ட ஆய்விற்காக 2010 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் முது தத்துவ மாணி பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

2018 இல் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவர் இன்றைய மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2020 இல் 'திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். (4-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.11.2021 தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட போது..

# சைவத் திருமுறைகளின் இலக்கிய நயத்தை ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்ற கலாநிதி கார்த்திகேசு திருப்பதி



ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் எமது சைவ சமயமே மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதை சர்வதேச ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இன்று பல மேலைத் தேய மக்கள் கூட சைவ சமயத்தின் ஆன்மீகத் தத்துவங்களினால் ஈர்க்கப்பட்டு சைவ நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறினால் அது மிகையாகாது.

உதாரணமாக அமெரிக்க நாட்டவரான சுவாமி தந்திரதேவா மகரிஷி சைவ சமயத்தின் ஆன்மீகச் சிந்தனைகளினால் கவரப்பட்டு இலங்கைக்கு வந்து திருகோணமலையில் ஆச்சிரமம் அமைத்து தனது வாழ்க்கையின் இறுதி வரை உண்மையான சைவ சமயியாகவே வாழ்ந்து பல சமய சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார்.

இத்தகைய பெருமைவாய்ந்த சைவ சமயம் கூறும் ஆன்மீகச் சிந்தனைகள் தேவாரம்,திருவாசகம் போன்ற திருமுறைகளிலேயே கூடுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

காரணம் இறைவனின் அனுக்கிரகம் பெற்ற அநுபூதிச் செல்வர்களான நாயன்மார்களினால் பக்திச் சுவை சொட்டச் சொட்ட பாடப்பட்டமையே தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகள் ஆகும்.

திருமுறைகளில் பொதிந்துள்ள தமிழ் இலக்கியச் சிறப்பை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் 'பெரியாழ்வாரும், மாணிக்கவாசகரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றிய ஒப்பியல் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்கிறார் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர்.

இரகுநாதன் அவர்களின் மேற்பார்வையில் குறிப்பிட்ட ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி திருப்பதி ஓய்வு நிலை தமிழ் ஆசிரியர் ஆவார். இயல்பாகவே தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பிப்பதில் ஆற்றல் மிக்க கலாநிதி திருப்பதி கிளிநொச்சி முதல் முழங்காவில் மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தமிழ் பாடத்தை கற்பித்து பல மாணவர் பரம்பரையை உருவாக்கியிருக்கிறார்.

அத்துடன் 2017 இல் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் விருது (குரு பிரதிபா பிரபா விருது) வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

'திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் உள்ள இலக்கிய உத்திகள்' தலைப்பில் மேற்கொண்ட ஆய்விற்காக 2010இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முதுதத்துவமாணி பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் அறிஞரான இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையின் மாணவர்களான பண்டிதர் பஞ்சாட்சரசர்மா, பண்டிதர் நவரத்தினக் குருக்கள், சீ.க.சுப்பிரமணிய ஆசிரியர், செ.நடராசா ஆசிரியர் ஆகியோரிடம் தமிழ் படிக்கும் அரிய சந்தர்ப்பம் கலாநிதி திருப்பதிக்கு கிடைத்துள்ளது.

2018இல் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற கலாநிதி திருப்பதி இன்றைய மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2020இல் திருநாவுக்கரசரின் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தமது வீட்டில் க.பொ.த. சாதாரணதர,உயர்தர மாணவர்களுக்கு தமிழ் பாடத்தை இலவசமாக கற்பிக்கும் கலாநிதி திருப்பதி கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு இரத்தினம் தம்பதிகளின் புதல்வர் ஆவார்.

வடகோவை சிவதேவராசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கலாநிதி.கா.திருப்பதி அவர்களினால் தொகுக்கப்பட்ட வடகோவை ஞானவைரவர் ஆலய வரலாறு



ஈழத்தின் உத்தரத் திசையில் அமைந்த யாழ்ப்பாணத்தில் புகழுடன் இலங்கும் கோப்பாய்க் கிராமத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கட்டுப்பலானை என்னும் குறிச்சியில் ஏறத்தாழ 125 வருட காலத்துக்கு முன்பிருந்தே தொன்மை வாய்ந்த ஆலயமாக ஞானவைரவர் ஆலயம் விளங்குகின்றது.

இவ்வாலய மூலமூர்த்தி இந்துக்களின் மிகப்பிரதம ஆலயமாகத் திகழும் இந்தியாவின் தில்லைச்சிற்றம்பலத் (சிதம்பரம்) தலத்தினிலே எழுந்தருளியிருக்கும் அம்பலவாணரின் தெய்வீக சக்தியோடு தொடர்புடைய தன்மையைக் கொண்டு விளங்குவதால் அம்பலவாண வைரவர் என்று கூறப்படுவதும் வழக்கமாக இருக்கிறது. இத்தலம் பற்றிய வரலாறு சம்பந்தமாக ஐதீகக்கதை ஒன்று கூறப்படுகின்றது. ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன் ஞானவைரவர் ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் பண்டாரம் என்று அழைக்கப்படும் ஒருவர் குடியிருந்ததாகவும் அவர் இறைபக்தராக ஆயுள் முழுவதும் பிரமச்சாரியம் காத்து வாழ்ந்து வந்தார் என்றும் தான் வசித்த காணியை சிதம்பரபுண்ணிய ஆதனமாக ஆலயத்துக்குரிமையாக எழுதி வைத்து விட்டு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக வாழ்வை நீத்து விட்டார் என்றும் கர்ண பரம்பரைச் செய்தியாகக் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் இவ்வாலய வழிபாட்டு முறையானது நாவல் விருட்சத்துக்குத் தெய்வீகத் தன்மை ஏற்றி உருவநிலை அற்ற மரவழிபாடாகவே இருந்து வந்தது. இதனைத் தொடர்ந்து 1910 ஆம் ஆண்டளவில் வழிபடும் பக்தர்களின் தொகையும் அதிகரித்துக் காணப்பட்டது. பின்னர் இவ்வாலயம் சோனெழு என்னும் குறிச்சியில் வசித்த சின்னத்தம்பி என்பவரின் வாழ்க்கையில் புத்திரப்பேறு கிடைக்காமையால் அப்புத்திரப்பேறு கிடைக்க வேண்டும் என்று நிவர்த்திக்கடன் வைத்து அவரின் குடும்பத்தினர் வைரவக்கடவுளின் ஆயுதமாகிய திரிசூலத்தை வழிபாட்டுக்குட்படுத்தி வந்தனர். ஏறத்தாழ 1922 ஆம் ஆண்டளவில் நாவல் மரத்தின் கிழக்குப் புறத்தை அண்டிய அடிப்பாகத்தில் அச்சூலத்தை பிரதிஷ்டை செய்தனர். அதன் பின் வைரவக் கடவுளின் அற்புத நிகழ்வாக சின்னத்தம்பி என்னும் அடியாருக்கு புத்திரர்கள் பிறந்தனர். இத்தகைய அற்புத நிகழ்வானது நம்பிக்கை உணர்வை ஊட்டி ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்தது.

இவ்வாலயம் அமைந்துள்ள கட்டுப்பலானைக் குறிச்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி பிராமணஓடை, மயிலிஓடை, இராதம்பு, கலட்டி, சோனெழு, உந்துவத்தை ஆகிய பகுதிகளில் வசித்தவர்களில் பெரும்பாலானோர் இவ்வாலயத்தை தமக்குரிய குலதெய்வமாக வணங்கி வழிபட்டனர். கால ஓட்டத்தில் நாவல் மரத்தின் பொந்தில் காகத்தால் எச்சமாகப் போடப்பட்ட ஆலம் விதை முளைத்து வளர்ந்து பெருவிருட்சமாகி விட வழிபாட்டிற்கு உட்படுத்தப்பட்ட நாவல் மரம் படிப்படியாக பசுமை குன்றிப் பட்டுவிட்டது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட வைரவர் நாவலடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் என முன்பு அழைக்கப்பட்டுப் பின் ஆலமரம் விருட்சமான போது ஆலடி வைரவர் எனவும் பக்தர்களால் பெயர் சூட்டி அழைக்கப்பட்டு வருகிறது.

ஆலமரத்தின் அடியில் வழிபாடியற்றி வரப்பட்ட திரிசூலப் பெருமான் பின்னர் 1942 ஆம் ஆண்டு நாவல் மரத்தின் கிழக்குப்பகுதியில் சீமெந்துக் கட்டத்தினால் ஆன ஆதிமூலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். ஆதிமூலத்தின் முன்னால் 12 அடி நீளமான மண்டபமொன்றும் 1942ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதன் பின் கோயிலில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் விளக்கிட்டு கற்பூரம் கொளுத்தப்பட்டு சுய வழிபாடாக இடம்பெற்று வந்தது. குறிப்பாக ஆடிமாதத்தின் இறுதிச் செவ்வாய்க்கிழமை நாள் அன்று பக்தர்கள் சேர்ந்து பொங்கல் மடை போடுவர். காலப்போக்கில் இம்முறைமை கைவிடப்பட்டது. 1945 ஆம் ஆண்டின் பின் நவநாவிநோதன் என்று அழைக்கப்படும் திரு.ப.தியாகராஜா என்பவரது தலைமையில் வெள்ளிக்கிழமை தோறும் பஜனை இடம்பெற்று வந்தது.


1970 ஆம் ஆண்டு வைரவமூர்த்தி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆதிமூலம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. ஆதிமூலமும் அத்தோடு கிழக்கே மேலும் 43 அடி நீளமான மண்டபம் ஒன்றும் 1979 இல் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டது. அடுத்து 1977 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு கிழக்கே உள்ள வேப்பம் விருட்சமும் வழிபாட்டிற்குரியதாக அமைந்துள்ளது.

1993ஆம் ஆண்டு பங்குனி மாதம் மேலும் சில உருவ வழிபாட்டிற்குரிய மூர்த்திகள் ஆலமரத்தின் (வடக்கு) அடிப்பகுதியின் வடபுறத்தில் சிறுகட்டிடங்களுக்குள் வைத்து வழிபடப்பட்டன. அதாவது நாகதம்பிரான், நாகம்மன், நாகம், வேல் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்கள் வழிபாட்டிற்குரியனவாக பிரதிஸ்டை செய்யப்பட்டன. இதன் பின் நாளாந்தம் கோயில் சுத்திகரிக்கப்பட்டு பூசை இடம்பெற்று வருகிறது. வருடந்தோறும் சித்திரைப்பரணி நட்சத்திரத்தில் அன்னதான (மகேஸ்வர) பூசை இடம்பெற்று வருகிறது. மற்றும் தைப்பொங்கல், மகா சிவாராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை, திருவெம்பாவை ஆகிய புனித நன்னாளில் பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தொடர்ந்தும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பாக பூசை இடம்பெற்று வருவதோடு குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் பஜனையும் இடம்பெற்று வருகிறது. அதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுடைய பக்தர்கள் கலந்துகொள்வார்




2017க்கு முன்னர் திருப்பணிச்சபையாக இயங்கிவந்த நிலைமாறி 2017 ஆம் ஆண்டு ஆலயபரிபாலனசபை யாப்பு விதிகளுக்கமைய உருவாக்கப்பட்டது. அத்துடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வாலயம் 20.02.2019 ஆம் திகதியன்று HA/5/JA/1675 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. இதன்பின்னர் 2019 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனசபையின் மேற்பார்வையின் கீழ் ஆலய புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் 1979 ஆம் ஆண்டிலேயே ஆலயத்தின் மணிக்கூட்டுக் கோபுரம் உட்பட ஆலய மண்டபங்கள் யாவும் பூரணமாகக் கட்டிமுடிக்கப்பெற்றன. அத்துடன் ஆலய மூலஸ்தானத்தின் தென்கிழக்கு மூலையில் 2005ஆம் ஆண்டு மேமாதமளவில் பாகசாலையும் தென்மேற்கு மூலையில் 2010ஆம் ஆண்டளவில் களஞ்சிய அறையும் அமைக்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டமையைக் கௌரவித்து 25.05.2019 அன்று பாலர் பகல் விடுதி மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டுவிழாவின் போது....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி திருப்பதி அவர்களின் பாராட்டு விழாவுக்கு வருகை தந்தோர்....



நினைவுச் சின்னத்தை வழங்கி கௌரவித்த போது..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்த தருணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

பாசமாயணைத்து பரிவுடன் உறவாடி காலமெலாம்
பாசத்தில் மூழ்க வைத்த அன்புச் சகோதரமே!
எம் என்போடு இணைந்த சதையாய் இருந்த
எம்தம் உறவே!

நீங்காத உன் நிழல்கள்
நித்தமும் நெஞ்சை வாட்டுதே
சோர்வு கொண்ட விழியிரண்டும்
சோகத்தில் மடைதிறந்து சொரிகின்றதே

உம் திடீர் பிரிவினிலே
வாயடைத்து நிற்கின்றோமே!
தேடி அலைகின்றோமே
ஓடியெங்கு மறைந்தீர்கள்?

உன் அன்புச்
சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்(ப)தி அத்தான்...

நாவலர் வழிவந்த நல்லான் - நம்
மனம் வென்ற திருப்பதி அத்தான்
தமிழ் ஒரு கண், சைவம் மறு கண்
தளராது இருக்கவும், தனைத்து வளரவும்
தன்னார்வத்துடன் தன்னிகரின்றி
செயற்பட்ட செயல்வீரன்

விலையில்லா கல்வியை விலை போட்டு விற்கும்
இலக்குமியைக் கொண்டு சரஸ்வதியை ஆறும்
கல்வி வியாபார உலகின் கனவான்கள் மத்தியில்
வளரும் பிள்ளைகளை வீட்டிற்கே வரவழைத்து
விலையின்றி விருப்புடன் தமிழ்கல்வி படைத்த
தமிழ்கல்வி காவலன், தழிழோட வாழ்பவன்

முன்னே வாழ்ந்திருந்த இடத்தில் - இன்று
வாழ்ந்து கொண்டிருந்த இடத்தில் - ரன்
என்றுமே வாழ்ந்திராத இடத்திலம் - இடம்பெறும்
இன்பத்திலும் துன்பத்திலும்
இனிய வாழ்த்தாய், இரங்கல் பாவாய் - இவரின்
தமிழ் தனியிடம் பெற்றிருக்கும்

இலக்கிய மேடைகளில் - நான்
கல்லாமையால் என் இயலாமையால்
பலமிழந்து பயந்து நின்ற வேளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாமையை இல்லாமையாக்கி
இயலாமையை இயலுமையாக்கி
பலத்துடன் மேடையில் பயமின்றி அமர
உதவிய உன்னத தமிழ்ப் புலமையோன்

தன்னை உலகில் பிரசவித்தவளை
பராமரித்து பாதுகாத்த பாசமகன்
தன் வாழ்வில் பிரவேசித்தவளை
கனிவாய் காத்த நேசக் கணவன்
தமிழுக்கும் சைவத்துக்கும் நல்ல தொண்டன்
நற்பண்பு பல கொண்ட எளிய மனிதன்

வலிகள் சுமந்தே வளர்ந்து வந்தவள்
சுமந்த வலிகளை மனதில் நினைத்தவன்
புறத்தழகை புறத்தொதுக்கி – அகத்தழகை
அறிவால் அமைத்த ஆன்றோன்
ஈன்றோர்க்குப் பெருமை சேர்த்த - இனிய
சமூகச் சான்றோன்.

எளிய பிள்ளையும் தமிழ் கற்று - இனி
உவ்விடம் தாய்மொழி காப்போம்
வைவர் கோயில் இறையிசை - இனி
உவர் வாய்மொழி கேட்போம்
தமிழ், சமய சந்தேகம் - இனி
எங்கு யார் வழி தெளிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் நொந்து வாய்மொழியா
மாண்புசார் மானிடனே – உன்
உடல் வெந்து உயிர் எடுக்க
அவசரம் என்ன? அவசியம் என்ன?
அன்னையவள் அழைத்தாளோ?
துணைவி துணை கொண்டாளோ?

விண்ணில் இறைபணியில் - இறைவன்
குறைகண்டு மனம் நொந்தான்
மண்ணில் இறைபணி செய்தவனின்
நிறை கண்டு அழைத்துக் கொண்டான்
நீர் இறையடியில் இனிதாய் வாழ்ந்திருப்பீர் - நாம்
இனிய நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நீங்கா நினைவுகளுடன்,
விதுர்சன், ஹர்சன், முகுந்தன், யாழினி
(மருமகன்மார்,மருமகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.....

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

கடந்த 16.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று எதிர்பாராத விபத்தில் எமது அன்புத் தெய்வமாகிய அமரர் கலாநிதி திருப்பதி அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து அரவணைத்து ஆறுதல் கூறி தேவையான உதவிகளை தாமாகவே செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் எமது துயரைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறுவதோடு இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு துணை நின்றவர்களுக்கும் நினைவுப்பிரசுரங்கள் மற்றும் நினைவுப் பதாதைகள் வழங்கி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இரங்கல் உரை வழங்கியோருக்கும் தொடர்ந்து வந்த நாட்களில் உணவளித்து எம்மை ஆசுவாசப்படுத்தியோருக்கும், அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளில் பங்கு கொண்டு பிரார்த்தித்தோருக்கும் இந்த நினைவேட்டிற்கு ஆக்கங்கள் நல்கியோருக்கும் இவ்வேட்டை கணினியில் எழுத்துருவாக்கம் செய்து உதவிய திருமதி.வினுஷா இராகவன் அவர்களுக்கும் அதனைச் சிறப்புற அச்சிட்ட குரு பிறிண்டேர்ஸ்க்கும் மற்றும் பல்வேறு உதவிகளை நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


அன்புடன்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கலாநிதி திருப்பதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி திருப்பதியின் வம்சாவழி

கந்தலிங்கம் + தையல்நாயகி

தள்

திருமகள்+*சூரியகுமார்*

திருப்பதி+*சாந்தி

ஞானபண்டிதன்+மஞ்சுளா

சதாயினி+பரந்தாமன்

பவித்திரன்

ஜவ்னா

பரன்

அபிராமி

லாவண்யா

மாதுளன்

தினி

உதயகுமார் + வசந்தரூபி

*சதீஸ்குமார்

சஜீத்

சஞ்சீவ்

ஜனுஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

**"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"**

**பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org